# Four Great Thinkers of the West

BY

K. RAJAGOPAL.

THE EDUCATIONAL PUBLISHING Co.,
NUNGAMBAKKAM, MADRAS.

N. K. BOOK DEPOT, RANGOON

M. K. V.
Paganeri

# மேனுட்டுப் பேரறிஞர் நால்வர்

K. இராஜகோபாலன்

PRESENTED BY:
V. PL. PL. ...

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பனி
நுங்கம்பாக்கம் சென்னை
1928
(விலை அணு 8)

N. K. BOOK DEPOT, RANGOON
நவீனகதா புத்தகசாலை இரங்கூன்.

The B. N. Press, Mount Road,
Madras.

3473

# PUBLISHERS' NOTE.

Tamil Literature, though rich in its variety, excellence and beauty, has no claim for independent prose to satisfy the standard requirements of literature. There is now a growing desire in the minds of men to give healthy shape to prose and many an honest endeavour has been made that way. Such efforts, however sincere they might be, do not seem to bear fruit for the very simple reason that there are no standard precedents furnishing writers with suggestions of new subjects and form. Those who are conversant with the history of English prose literature will know the stages it has gone through and the sources from which its wealth has been derived and the part the translations from the European Masters have played towards the shaping of it. The English people who are justly proud of a very high order of accomplished prose of varied excellence are not a little indebted to Europe.

It is therefore unnecessary to be told what we should also do. In this spirit, with the approval of a few educationalists, we have published these translations from the works of some of the recognised masters of language and thought, with the hope that our endeavour will be appreciated and welcomed, and that it will give an impetus to the future growth of prose literature in Tamil.

We sincerely thank the Editor of "Kalanilayam", for having allowed us to reprint these translations from that journal in which they originally appeared.

E. P. C.

JOHN RUSKIN'S

# Lilies of Queens' Gardens.

# முகவுரை.

ஓங்கிய புகழொடு திகழ்ந்த ஆங்கிலப் புலவர்களில் ஒருவராய ஜான் ரஸ்கின் என்பவர், 1819-ம் வருஷம் லண்டனில் பிறந்து 1900 வருஷம் வரையில் இருந்தவர். கல்வி கேள்விகளில் முதிர்ந்த உணர்ச்சியுடையவராய்க் கலைகளின் திறத்தைப்பற்றியும் இராஜாங்கப் பொருளா தாய முறைகளைப்பற்றியும் பல உண்மை மொழிகள் பேசியும் எழுதியும் உளர். எத்தகைய புத்தகங்களை எவ் வாறு படிக்கவேண்டும் என்று அவர் செய்த ஒரு பிரசங் கத்தை யடுத்து, "ஏன் படிக்கவேண்டும்" என்று மறுநாள் செய்தவொரு சிறந்த பிரசங்கத்தை இங்கு மொழிபெயர்த் துத் தந்திருக்கின்றோம். உலக வாழ்க்கையில் மாதர்க்கு உரியஇடம் எதுவென்பதையும்,வாழ்க்கையைச் செம்மை யாய் நடத்திவைக்கும்பொருட்டு அவர் எவ்விதப் பயிற்சி அடைய வேண்டுமென்பதையும், கல்வியை மேன்மேலும் கற்பதால் அல்லாமல் யாவரும் தமக்கேனும் பிறர்க்கேனும் பயனுடையவராவது இயலாதென்பதையும், பேரறிஞ ராய ரஸ்கின் தமது மெய்யுரைகளால் இங்கு வெகு அழ காய் விளக்கியிருக்கின்றார்.

---

# அரசியர் மலர்வன மல்லிகை

இந்த உபந்நியாசம் முன்னொன்றின் தொடர்ச்சியாதலால் இவ்விரண்டினாலும் நான் விளக்கநினைத்த கருத்தை இங்கு விளக்கிச்சொல்வது நலமாகும். எதனைப் படிக்கவேண்டும், எம்முறையிற் படிக்கவேண்டும் என்று நான் முன்னாள் ஆராய்ந்த விஷயம், ஆழ்ந்து கருதவேண்டிய பிறிதொன்றினின்று பிறந்ததேயாகும். 'புத்தகமும் படிக்கும் முறையும் இவை' என்று நான் காட்டியதிலிருந்து, 'நாம் எதற்காக அவைகளைப் படிக்க வேண்டும்' என்று நீங்களே சிந்தித்துக்கொள்ளத் தலைப் படும்படி முயன்றுவைப்பதே எனது கருத்தாயிற்று. கல்விப் பயிற்சியும் இலக்கிய உணர்வும் எங்கெங்கும் பரவுதற்கு இக்காலம் இருக்கின்ற சாதனங்கள் எவையாயினும், கல்வியை ஆதாரமாகக்கொண்டு அடையவேண்டிய நிலை எத்தன்மைத்தென்பதையும் இலக்கியங்கள் போதிப்பது எதுவென்பதையும் நாம் தெளிவாய் அறிந்திருந்தால்மாத்திரமே, இருக்கும் சாதனங்களை நாம் சரிவர உபயோகப் படுத்திக்கொள்ள இயலும் என்னும் வாய்மையை என்போல நீங்களும் உணருமாறு விரும்புகின்றேன்.

அறம்பிறழா வழக்கங்களும், தேர்ந்த நூல்களைப் படிப்பதும் ஆகிய இவ்விரண்டும், கயவரும் கல்லாதாருமாய மாக்களின்மீது செலுத்துதற்கு அமைந்தவோர் வன்மையை நமக்கு அளிக்கின்றனவென்பதை நீங்கள்

உய்த்துணர வேண்டுமென்பது எனது கோரிக்கை. மெய் யான பொருளில் இதுவே, அதனதன் அளவிற்கேற்றபடி அரசியலாகும். தர்ம சிந்தனையும் இலக்கிய உணர்ச்சியும், ஆகிய இவைகளே மக்களுக்கிடையில் ஒருவருக்கு இருக்க வல்ல தூயதாம் அரசுரிமையை அளிக்கின்றன. வேறு எத்தனையெத்தனையோ அரசுகள் இருந்தாலும் அவை யெல்லாம் அரசாமோ! கண்பகட்டுச் சின்னங்களும் அடக்கியாளும் அதிகாரமும் அரசோ ஆகா! நெடுங் கொடியும் மணிமுடியும் செங்கோலும் நால்வகைச் சேனை யும் சிங்காதனமும் யாவும் வெறும்பகட்டால் பகட்டி நிற்கின்ற தோற்றங்கள். அரசின் நிழல்களே அவை யன்றி அரசப்பெருமையே அவைதாம் ஆகுமோ! வேழ முண்ட விளங்கனிபோல் முழுவதாய்த்தோன்றும் போலியரசனின் சின்னங்களைக்கண்டு இவைகளே அர சென்று கொண்டாடுவது பேய்த்தேரைப் பின்பற்றிய செய்தியாய் முடியும். மற்றுக் கொடுமை இழைத்தற்கு ஆதாரமாகும் அதிகாரமும் ஒருவனை அரசனென்று ஆக்கிவிடாது. மெய்வழி நிற்கும் வேந்தர்க்கு அதிகாரம் அவசியமே இல்லை. நீதி முறையாலும் அன்பின் நெறி யாலும் ஆள்வர் அவர். நீதியும் அன்பும் போக்கிலே போக விட்டுத் தன் மனம்போன போக்கெல்லாம் உலகத்தை ஆட்டிவைப்பதற் கமைந்த வன்மையுடைய அதிகாரத் தால் கொடுங்கோல் செலுத்துவோரை அரசர் என்பது மிகவும் பேதைமை.

ஆதலால், இவ்வுண்மையை யான் மீண்டும் உரைக் கின்றேன். கேட்டு உங்கள் கருத்திலே பதியவைத்துக் கொள்ளுங்கள். முதலும் முடிவும் இதுவே. வாய்மையே

நோக்கின் தூய்மையாய அரசென்று இருப்பதுதான் ஒன்றே. முடியொன்று தலைமேல் மூடினுலென், மூடா திருந்தாலென்! எந்நாளும் நிலைபெற்று இன்றியமையாத் தன்மையில் யாவரும் எய்தவல்ல அரசு எதுவென்று உரைக்கக் கேண்மின். தருமத்தில் தளராத தனிநிலையும், மெய்யறிந்து ஆராயும் மனநிலையும் எய்துவாயாயின் எய்துதற்குரிய அரசும் அன்றே நீ எய்தினுய். மற்றவர்க்கு வழிகாட்டி அவரை உயரவுயர அழைத்தேக இதனுல் தான் வல்லவன் ஆகின்ருய். மன்னன் என்ற பதத்தை இப்பொழுது நேரானபடி உபயோகிக்கின்றவர் இல்லை. பதத்தின்மேல் பொருள் நோக்கின் நிலைபெற்றவன் என் பது தெரியவரும். (மன்னுதல் - நிலைபெறுதல்) நல்லறத் திலும் மெய்யன்பிலும் சலிக்காதவோர் நிலையினை யுடைய வன் எவனுயினும் அவன் மன்னவனுகின்ருன். இவனுக்கு நடுக்கமும் இல்லை, நடுநிலை சாய்வதும் இல்லை. மெய்யையே தானமரும் ஒருதனிச் சிங்காதனமாகக் கொண்டு, மாற்ற வும் அழிக்கவும் யாவராலும் இயலாவகை வீற்றிருக்கும் இவ்வரசு ஒன்றே அரசாகும்.

அல்லலுற்று அலையா அமைதியும், நந்தாது எப்பா லும் நல்குகின்ற நலங்களும் நாமெய்தி, அதனுல் மற்ற வர்க்கும் அவைகளைப் பயக்குவிக்கத் திறமளிக்கும் தன்மையிலே கல்விப்பயிற்சியும் இலக்கியவறிவும் நமக் கோர் தனியரசாட்சியைத் தருகின்றன என்பதை உய்த் துணர்ந்தபின் இன்னென்று நீங்கள் சிந்திக்குமாறு வேண்டுகின்றேன். கல்வியும் கேள்வியும் நிறைந்த வுடன் கேளாது நம்மை வந்தடையும் அவ்வரசாட்சியில் எவ்வளவு எத்தகைய மாதர்களுக்கு உரியது? மனையாட்டி

என்றமட்டிலே அவர்களது அரசு அடங்கிவிடாது. அன்னோர் தமதாட்சியை எத்தூரம் செலுத்துதற்கு அழைக்கப்பட்டுள்ளார்? மாட்சியொடு கூடிய மங்கைமார்க்குரிய அரசின் நன்னலத்தை வகைதெரிந்து வினையாற்றின், அதனால் அழகும் ஒழுக்கமும் திகழ அன்னவர் மெல்லடியால் அளந்தாளும் இடமெல்லாம் மலர்வனமாகி, அதனிலவர் ஆற்றும் செயலனைத்தும் மல்லிகை மலர்ந்ததென மணக்கச் சிறுகுடில்முதல் நெடும் பெருநாடு ஈறுக யாவுமே அவருய்க்கும் அரசால் உய்ந்தனவாகும். ஆயின், மாதருக்கு இயன்ற கருமமும், அதனை ஆற்றும் வகையும் இன்று நாம் சிறிதிங்கு ஆராய்வோம்.

இவ்வினையில் நாம் புகுமுன், இதுவரை எவராலும் முடிவு செய்யப்படாத மற்றொரு ஆழ்ந்த கேள்வியொன்றும் நம்முன் தோன்றுகிறது. பெண்கள் பெறவேண்டிய ஆட்சிவன்மை எத்தகையதா யிருக்கவேண்டுமென்று நிர்ணயம் செய்யுமுன், அவர்கண்மாட்டு இயற்கையாயமைந்துள்ள சக்திதான் என்ன தன்மையது என்று நாம் தேர்தல் வேண்டும். பின்னது துணியா முன்னம் முன்னதின்முடிவு காணல் அரிதாகும். இதுவேபோல் அவர் இல்லத்தில் ஆற்றவேண்டிய உண்மையான வினையெதுவெனத் தேராமுன், வெளியிடத்தில் தம் கடனாற்ற எப்படி அவர்கட்குக் கல்வி துணையாகுமெனக் கருதுதலும் முடியாது, அன்றோ. குடும்பத்தின் நன்மைக்கும், சமுகத்தின் நல்வாழ்விற்கும் இன்றியமையாததான இவ்விஷயத்தைப்பற்றி நாம் இந்நாள் இடைவிடாது பயனற்றவாறு பேசியும் எழுதியும் காலங்கழித்து வருவதுபோல் இதற்குமுன் என்றும் செய்ததில்லை. ஆண்

பெண் இருபாலார் தம்முள் நின்றுவரும் தொடர்பையும் இயற்கைக் குணங்களையும், வேறுபமைந்த மனதின் போக்கையும் தன்மையையும், எழுதியும் பேசியும் வரு பவர், அபிப்பிராய பேதமின்றி இதுவரை யார் அளவு கண்டார். யாருமிலர். மாதர் உரிமையென்றும், பெண் கல்வியென்றும், மானிடச் சாதிக்கு அவர் செய்யும் வினை யொன்று உளதென்றும், ஆடவரினின்றும் வேறுபட்ட வாழ்க்கையராகித் தனியான பற்றுதலும் அவர்கள் உடை யார்போல் கூறப்படும் சொற்கள்சில நம் காது துளைக் கின்றன. மாதரார் வாழ்க்கையும் வேறு, பற்றுதலும் வேறு, என்னும்வரையிலாவது இச்சொற்கள் தவறெனு ஆதல்வேண்டும். மற்றுப் பெண்ணோ அவள் புருஷனின் சாயையென்றும், தனக்கென்றோர் உரிமையொன்றும் பெற்றிலாது நாயகன்தன் ஆண்மை வலியால் காக்கப் பெறும் பதுமையென்றும், அடிமையென்றும் கூறுவார் ஒரு சாரார். இக்கூற்று முன்னதினும் பெருத்த தவ றாகும். செயலற்ற அடிமையும், உயிர்ப்பொலிவில்லாச் சாயலுந்தான் நம் வாழ்க்கையில் துணைநிற்க வல்ல மாதரோ, சொல்க!

இனி நாம், ஆடவர்க்கும் பெண்டிற்கும் உள்ள உண் மைத் தொடர்பும், இருவரும் ஏற்றத் தாழ்வென்ற கொள்கை விடுத்துச் சந்துபட வாழ்க்கையில் பொருந் துங்கால் அதனால் ஏற்படும் நலனும், அந்நலந்தரும் வன் மையும், சீரும் சிறப்பும் எத்தகையனவென்று ஆராய்ந்து முடிவொன்று காண முயல்வோம்

இந்நிலையில் நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தைத் தொடர்ந்து ஆராயப் புகுமுன், முன்னர் நான் செய்த

வொரு பிரசங்கத்தில் கூறியவொன்றை மீண்டுமொரு முறை உங்களுக்கு இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நமது வாழ்க்கையில் வழிகாண முடியாத நிலைசில வந்து தோன்றுங்கால், அந்நிலையைப் போக்கி வாய்மைதனை அறிவதற்கு, உயரிய தத்துவநிலையில் வாழ்வு நடத்திய ஆன்றோர்களை நாடுமாறு செய்தலே கல்விப் பயிற்சியால் நாம் பெறும் பயனெனக் கூறினேன், நம் மனத்திற்கு விஷயத்தின் வாய்மை எட்டாத காலத்து, நம்மினும் பன்மடங்கு விரிந்துயர்ந்த நோக்கும், சித்திரக் கண்ணும், சிருஷ்டியில் கலந்த மனமும், காலங்கடந்த அறிவின் ஆற்றலும் படைத்த பேராசிரியர்களிடம் சென்று,நம்முடைய ஐயம் கூறி, கண்களுக்கு விளங்காப் பொருளையும், பொருளின் தத்துவத்தையும் அன்னார் நூல்களின் மூலமாய்க் கண்டு, வக்கீலும் நீதிபதியுமான அவர்களது காலதேச வர்த்தமானங்களால் கட்டுண்ணு முடிவைத் தெரிதலே, புத்தகங்களைச் சரியான வழியில் உபயோகப் படுத்திக் கொள்வதாகும்.

நாமும் இப்பொழுது அவ்வாறே செய்வோம். அறிவிலும் திருஷ்டியிலும் குணநலத்திலும் மிகமிகச் சிறந்தோரான பெரியோர், இன்றுநாம் கருதி முடிவு தேடுவதற்கு எடுத்துக்கொண்ட விஷயத்தைப்பற்றி ஏதாவது ஆய்ந்தறிந் துரைத்துளரோ? உளர் எனின் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் அமைந்த தொடர்பு எத்தகையது? ஒருவருக்கு மற்றவர் ஆற்றும் உதவியின் இயல்பும், அவரவர்க்கு உரிய இடமும்பற்றி என்ன கூறியுள்ளார், பார்ப்போம். அதுவேதான் படித்தவர்செயலும் முறையுமாகும்.

முதன் முதலாக ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்னும் பெரும் புலவர்பாற் செல்வோம். அவர் சித்திரக் கற்பனையிற் பிறந்த இருபாலாரிலும் மாதரே உயர்ந்தவர் என்னும் வாய்மையை அன்னார் நூலைப் படித்தவர் ஏற்பர் என்றே எண்ணுகின்றேன். நிறையிலும் நலத்திலும் தன்னினைவிலாக் கருணையிலும், தியாகத்திலும் சிறந்த மாதர்கள் இல்லா நாடகத்தையே அவர் இயற்றக்காணோம். ...கார்டீலியா, டெஸ்டிமோனா, இஸபெல்லா, ஐமொஜன், ரோஸலிண்டு முதலாயினோர் மங்கையர் திலகமாகாரோ? பிறப்பிலேயே பெருமை யுடையவர்கள் பெண்கள் என்பதை நமக்கு அறிவுறுத்தத்தான் அக்கவிநாயகன் இம் மாதர்களைக் கற்பித்துள்ளான் போலும்... இனியும் பார்ப்போம். ஷேக்ஸ்பியர் ஆக்கிய ஒவ்வொரு நூலிலும், அழிவிற்கும் நாசத்திற்கும், ஆடவன்தன் சிறுமையும், அறியாமையும் மெய்ச்சோர்வும் தவறுமே காரணமாகும். கெடுவது தவிர்ந்ததெனிலோ அதற்கு மாதொருத்தியின் நல்லறிவும், திறமையோடுசேர்ந்த ஒழுக்கமேகாரணமாதல் வேண்டும். சீரிய நங்கையொருத்தி யிடைப்புகாது ஆடவன் திறமையால் நாசம் தவிர்ந்தது என்பதை நாடகமனைத்திலும் மருந்திற்கும் காண்ப தரிதாகும்,... ஆனால் ஒன்று: ஷேக்ஸ்பியர் நாடகத்தில் திறமையில்லாப் பேதைப் பெண் ஒருத்தி யிருக்கின்றார்கள். அவள்தான் ஒபீலியா. காதலன் ஹாம்லெட் தன்னெஞ்சத்தில் எழுந்த சஞ்சலம் பல அவனை அலைக்க, செய்வினை தெரியாது தவிக்குங்காலை அவனுக்குத் துணையொன்றும் செய்யாது, அவ்வெள்ளைப் பெண் தகப்பன்தன் கைப்பொம்மையாய் விலகி நிற்கவே வந்துற்றது நாசமெலாம், என்பதை யறி

யீரோ ?...மக்பத்து, ரீகன், கானரில் என்ற கெட்ட பெண்களும் இருக்கக் காண்கின்றோம். அக் கேடுகெட்ட பெண்கள் இயற்கைவிதிக்கு மாறுபட்டு அஞ்சவரும் விபரீதங்களே ஆவார்கள். எனவே தீமையிலும் அப் பெண்கள் தலைசிறந்தனர்.

வாழ்க்கையில் மாதர்க்குரிய இடமும், அன்னவர் தன்மை இதுவென்றும் ஷேக்ஸ்பியர் நமக்கு விளக்கித் தருவது இதுவேதான். ஆடவர்க்கு உற்றதுணை பெண்கள் என்றும், வந்தடையும் அழிவைத் தடுக்க இயலாத காலத்தும், அழிவிற்கு இழிவொன்றும் ஏற்படாது காத்தளிக்கும் இயல்பினர் அவர் என்றும், மானிடச் சாதியே தானேயாய், மாந்தர்தம் உள்ளந்தோறும் அலகிலா வடிவிற்றோன்றி மாந்தர் இயலையும், மனத்தின் போக்கையும், மானஸ தத்துவ நுட்பத்தையும் உள்ளவாறு உணர்ந்த பெரியோன் ஷேக்ஸ்பியர் தன் நூலின்கண் காட்டித் தருவதை நோக்குமின், தெரியவேண்டின்.

பெரும் புலவன் ஷேக்ஸ்பியர் நிற்க, மற்றவர்மாட்டும் நாம் விரைவின் அணுகுவோம். மாந்தர் இயல்பின் நுணுக்கத்தின் அறிவிலாவது, ஊழின் காரிய காரண உணர்விலாவது முன்னவன் வீற்றிருக்கும் இடத்திற்குக் காதத்திற்கப்பாலும் நிற்பதற்கு இயலாதான் ஆனாலும், மக்கள் நிலை, மனத்தின் போக்கு இவைதம் பொதுவிதியின் நுட்பத்தை யறிந்துள்ள ஸர் வால்டர் ஸ்காட் (Sir Walter Scott) என்னும் ஆசிரியன் நமக்கு எவ்விதத்தில் துணை செய்வான் என்று பார்ப்போம். அவனது கற்பனை உரைநடைநூல் சில (Romantic Prose) நமது கருமத்திற்கு ஏற்றவை யல்லவென்று ஒதுக்கி விடு

கின்றேன். அவனது ஆரம்பப் பாடல்கள் அழகு நிரம்பியவைதான், என்றாலும், ஒரு பள்ளிப்பையனது உயர் நோக்கிற்கு (School-boy's Ideal) மேலதான தத்துவம் எதையும் தன்பாற் கொண்டதில்லை. அவர் ஸ்காட்டுலாந்து மக்களது வாழ்க்கையையும் வாழ்வின்போக்கையும் ஆய்ந்தறிந்ததின் பயனாகப் பிறந்த அவரது நூற்கள் பல பெரும்பயனும் விடையும் நமக்குத் தருவதாகும். ஸ்காட் அவர்களின் நூலனைத்திலும் செயற்கரிய செய்த உயரிய ஆடவர் டாண்டி டின்மாண்ட் (Dandie Dinmont), ராப் ராய் (Rob Roy), கிளேவர் ஹௌஸ் (Claver House), என்பவர்களே. இவர்களில் ஒருவன் குடியானவன், ஒருவன் வழிக்கொள்ளைக்காரன், கடைசியவன் கெட்ட காரியங்களுக்குத் துணை நிற்பவன். இம் மூவர் அடைந்த பெருமையாவும், அவர் பெற்ற உடல் உரத்தாலும், மனவுறுதியாலும், அஞ்சாத் தன்மையாலுந்தான். அவர் தம் நூலிடைப் பிறந்துலவும் மற்றவர்களோ, விதியின் விளையாட்டுப் பிள்ளைகளே யாவர். அவர்கள் கருமம் துணிவதும், துணிந்ததைச் செய்வதும், வெல்வதும் விதியின் செயலேயாகும். முதிர்ந்த அறிவால் செயற்கரிய கருமம் வகுப்பதும், வகுத்ததைச் செய்யும் ஆர்வமும், பகையென வரும் தீமையை அகற்ற முன்னணியில் நிற்பதும்போன்ற குணச் சிறப்பை ஸ்காட்டின் கற்பனையில் பிறந்து வினைசெய்யும் ஆடவரிடம் காணல் முடியவில்லை. ஆனால் அவர் கற்பனையரங்கினில் நடமாடும் கொடியன்னார் மனங்கவரும் சாயற்பொலிவும், உள்ளக் கருணையும் அறிவின் ஆற்றலும், எந்நிலையிலும் வாய்மைவழி நிற்கும் நேர்மையும்,

இது கடமைதானே என்னும் சிந்தனையில்லாத் தன்னல மறக்கும் தியாகமும், தனதன்பன் செய்யுந் தவறுகளை விலக்க முயல்வதால் அவனை மனநோகக் காண்பதினும் பொறுத்திருத்தலே முறையென விருக்கும் பேரறிவும், தன்னடக்கமும் யார் மனதைத்தான் கவராதொழியும்! ......இம்மங்கையரின் பேரறிவு தகுதியற்ற காதலர் களின் குணத்தை மெல்லமெல்லப் பண்படுத்தி உயர்த்திக் கடைசியில் அவர்களுடைய இன்னல்களைக் களைந்து பொருந்தாவெற்றியும் தருவதை நாம் சிலசமயம் கேட்க, இவனுக்குமா வெற்றி என்று சிறிதளவு பொறுமையும் இழக்க நேரிடுகிறது. இத்தகையார் இந்நூலின்கண் நாம் காணும் தன்னலம் துறந்த மாதரார்.

ஆகவே ஷேக்ஸ்பியர் போலவே ஸ்காட்டின் நூலி லும் மனம்போன போக்கெல்லாம் போகும் காளையர்களு குக் காப்புமாய் மனச்சோர்வு ஏற்பட்டகாலை ஆறுதல் அளிக்கும் ஆசிரியருமாய் அமைகின்றனர் மங்கையர். இத்தொழிலை மாதர்மாட்டுத் தவறியும் ஆடவர் செய்வ தாகத் தெரியவில்லை...இத்தாலிய, கிரேக்க நூலாசிரியர் களும் பெண்ணையே சிறப்பித்துள்ளனர். தாந்தே(Dante) என்னும் பெருங்கவி, செத்துமடிந்த தனது காதலியின் ஞாபகார்த்தமாகச் செய்த நூலொன்றில் மேலுலகு நின்று தன்னை இடைவிடாது மனைவியின் ஆன்மா காத்துவருவதை மனமுருகிக் கேட்பவர் உளமுருகப் பாடுவதை அறியீரோ... அல்ஸெஸ்டிஸ் என்னுமொரு மாது கணவனது உயிரைக்காக்கத் தன்னுயிரை யளித்த பெருமையை அறியாதார் ஆர்! நேரமிருப்பின் இவ்வண்ணம் ஒன்றன்பின் ஒன்றாகப் பெரியோர் பலர் பெண்களைப்

பற்றிக் கூறியுள்ளதைக் கூறிக்கொண்டிருக்கலாம். ஆனால் கற்பனை உலகினில் உலவிப்பார்ப்பதை இனி நிறுத்துவோம். உலகஇயலை நன்கறிந்த இப்பேரறிஞர் கூற்றிற்குரிய மதிப்பைத் தருமாறே நான் உங்களை இப்பொழுது கேட்கின்றேன்.

அல்லலேயான இவ்வாழ்க்கையில் பொழுதுபோக்காக அவர் கற்பனைத் திறத்தால் புனைந்த வாய்மையற்ற வீண் கதை இவையென எண்ணுவீர்களோ, கூறுங்கள். "ஐய இது சோம்பலிற் பிறந்த பொய்ம்மை. கற்பனையேயானாலும் உலக நடைக்கு ஒரு சிறிது பொருத்தமுளதாயின் ஒருவாறு ஏற்கவும் ஏற்கலாம். இக்காலம் நாம் காணும் வாழ்க்கையைப்பற்றிய, நமது பொதுக்கருத்துக்கு அன்னார் காட்டும்வழி முறண்பாடு உள்ளதாய் அமைந்துள்ளது. எனவே "நாம் விரும்பி ஏற்கத் தக்கதாயில்லை அவர் கூறும் வாழ்க்கைத் தத்துவம். கருமம் துணியவும் ஏற்றவரல்லாப் பெண்கள் எங்ஙனம் நமக்கு வழித்துணைவராய் இருத்தல் முடியும். மனிதனே சிறந்தவன் அறிவிலும், ஆற்றலிலும். கருமந் துணியவும், துணிந்ததைச் செய்யவும், ஆளவும் தகுந்தவன் அவனே" என்பது உங்களது எண்ணமோ ? கூறுவீர்.

மாதர் இயல்பும் அவர்தம் தகுதியும் உரிமையும் முடிவாய் இதுதானென இதுகாறும் தேர்ந்திடாத இவ் விஷயத்தைப்பற்றி நாம் ஒருவாறு துணிதல் அவசியமாம். மேலே நாம் கண்ட பெரியார் அனைவோரும் தவறியுள்ளாரோ ? அல்லது தவறியவர் நாம்தானா ? ஷேக்ஸ்பியரும், தாந்தேயும், ஹோமரும், மற்றுப் பலரும், நமது பொழுது போக்கிற்கென்று சமைத்த பதுமை

களோ அன்னவர் நூலினுட் பிறந்து நடந்தாண்ட பாவையர்கள்; அல்லது விளையாட்டுப் பதுமையினும் இழி வான்தான பொய்ம்மைத் தோற்றங்கள் தாமோ? அவர் சொல்லிவைத்த நிலை யொருகால் வந்துற்றபோதிலும், வாழ்க்கையில் அது துக்கமொடு துன்பத்தையும், குழப்ப மொடு நாசத்தையுந்தான் தந்திடும் என்பது உங்கள் எண்ணமோ! இவ்வண்ணம் நீங்கள் கருதுவீரேல் மனி தரின் மனமே கூறும் சான்றுதான் என்னவென்று சற்று நோக்குங்கள். வாய்மையொடு தூய்மையும், அமைதி யொடு ஒழுக்கமும் சேர்ந்த வாழ்க்கையின் வளர்ச்சிக்குப் பேர்போன இக் கிறிஸ்துவ சகாப்தத்தில் நங்கை யொருத்தி கிழித்தகோடுகடந்தறியான் ஆடவன் என்பதை நீங்கள் அறிவீர். நெஞ்சிடை யெழுந்த காமக்கிளர்ச்சியால் களியனொருவன் செய்யும் கருமமென்று கருதாதீர் இவ் வழிபாட்டை. வாழ்க்கைக்கு இயன்ற வினைகளில் தலை வன் பெறும் வெற்றிக்குரிய புகழுரையும் பரிசிலுமே தருவதுடன் மங்கைமார் அமைபாது, செய்வினை தேரு தற்குற்ற துணையாய்த் துணிந்ததை முடிக்க ஊக்கமுமாய் அவர் கிளர்கின்ற காரணத்தால் எழுந்ததே இவ்வழிபாடு என்று அறிமின். எளியவர்மாட்டுக் கருணையும், அன்பே யாய மனதினையும், அறங்காத்த வாளிலங்கும் கைகளையும் பெற்ற வீரர் செறிந்திருந்த அந்நாளில் (The days of Chivalry) 'செய்வதற்கு உரியதோ இது' எனக் கருதாது காதல் நங்கையொருத்தி இட்ட கட்டளையை வேத மொழியெனக் கொண்டு நடப்பதே முறைமையும் சீரிய வாழ்க்கையுமாய் வாய்ந்திருந்தது. 'இத்தகைய ஒழுக்க மிலான் களியனும் காமுகனும் கீழ்மகனுமே யாவான்.

அவன் பெற்ற உடல்வலியும், செயலின் ஆற்றலும் தீதே யாய் முடியும்.' என்னும் வாய்மையை ஆன்ரோர் கண் டிருந்தனர். ஆனால் இங்கு ஓர் ஐயம் சிறிதெய்தி மடவார் இட்டதே சட்டமெனக் கொள்ளுதல் எப்பொழுதும் நன்மை பயக்குமோ என்று, நீங்கள் கேட்கலாம். நல்லொ ழுக்கமும், நற்பழக்கமுமுடைய பெருமகன் எவனும் சீரிய குணநலச் சிறப்பிலாத் தகுதியற்ற இழிதகைப் பெண்ணுடன் பழகவே மாட்டான். இது சரதம்.

இனிமேல் இவ்விஷயத்தைப் பற்றிப் புதியபுதிய சான்றுகள் தேடி நான் வற்புறுத்தப் போவதில்லை. இருந் தது கூறினேன், கேட்டீர். கல்விப் பயிற்சியால் நீங்கள் பெற்ற அறிவுகொண்டு 'இனி இருக்கவேண்டுவது என்ன' என்று ஊகித்துணர்தல் கூடும். வீரனுக்கு அவன் மனைவி, தனது மெல்லிய கரங்களால் போர்க்கவசம் பூட்டிச் சமர்க்களம் அனுப்புவதென்பது, பண்டை வழக்கத்தின் வாய்ப்பட்ட வொரு பொருளற்ற செயலென்று சிறிதுஞ் சிரித்துச் செல்லவேண்டா. ஐய, இதனில் ஆழ்ந்த பொரு ளுண்டு. நாயகி தன் செவ்வியகரத்தால் அன்போடு அணியும் கவசந்தான் உள்ளத்துடன் இயைந்து ஆன்மகவசவாய் அமைகிறது. ஆண்மை யழிந்து அவன் நசிப்பதும் அவள் கையொடு மனமும் சேராது இடும் அரைக் கவசத்தால் தான்............

பொழிலிடைப் பிறந்தநேயம், கையுறையும் சூள் மொழியும் நீர்வார்க்கக் கொழுந்தோடி வளருங்கால், காதல் இருவர் பெற்ற உள்ளநிலையைப் பற்றியாவது என் னுடன் சேர்ந்து நீங்களும் 'ஓம்' என்பீர் என்றே எண்ணு கின்றேன். காதல் வளர்ந்து மணவினையாய் மாறிய

பிறகும் அன்புநிலை முன்போல் இருந்துவரக் கூடுமோ என்று நாம் ஐயுறுகிறோம். அத்தகைய உள்ளநிலை காதலர்மாட்டு இருத்தல் அமையுமெனினும், புருஷன் மனைவி என்ற உறவில் அது பொருந்தா நிலையாகும் என்று எண்ணிவிடுகின்றோம். ஏனெனில் காரணமு முளது. நம் மனத்திறை கொண்ட மாணிழையாள் தன் உள்ளக்கருத்தையும் அன்பின் ஆழத்தையும் அளவு காணமுடியாது, கிடைக்கப் பெறுவோமோ இச் செல்வியை என்று திகைப்புற்று, அவள் நட்பைப்பெறக் கையுறைகொண்டு செல்வதும், அருஞ்சூள் கூறுவது மாகிக் காதலவள் இதழ் அசையத் தானசைவதுமாய் வழிபட்டு முடிவின்வகை தெரியாது வாழ்கின்றோமாதலால்தான். மணமாய் மாறியதும், மனைவியின் தத்துவம் போய், அவள் உடைமைப் பொருளாய் அமைய, எல்லா உடமைப் பொருளும் அடையும் நிலையே அவள் கிடைக்கப் பெறுகிறாள். இதுதானா மணவினையால் மனிதன் பெற வேண்டுவது? தேமாம் பொழிலிடைக் காமன் கணை தூண்டக் கிளர்ந்த அன்பும் வழிபாடும் சாச்வத வாய்மையாய் மாறவேண்டுவது அல்லவோ திருமணம் செய்யும் ஒரு தனி உதவியாகவேண்டும். ஆனால் 'ஐய, துணையாய் அமையுந் தன்மையும், பதிக்கு அடங்கி நடக்கும் மனையாள் தொழிலும் எவ்வாறு பொருந்தும்' என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். ஆம், நன்றாகப் பொருந்தும். மனைவி யென்னும் அறத்தினின்றும் துணைவி என நிற்றல் மாறுபட்டதில்லை. 'இது இது' அவன் கருமமென விதி வகுக்காது, வாழ்க்கை போமளவும் வழித்துணையா யிருத்தலாற்றான் அவை பொருந்

தும். வாழ்க்கைத் துணைவிதான் மனைவி. ஆடவன் இட்ட வேலையைச் செய்யும் பணியாளும் அடிமையும் அல்லள் பெண். இதனைச் சிறிது விளக்குவோம்.

ஓரேவகையான பொருள்களுக்குள்தான், இது உயர்ந்தது இதுதாழ்ந்தது என்று ஒப்புநோக்க இயலும். ஆனால், சிருஷ்டியிலேயே வேறாய் அமைந்த ஆண்பெண் என்னும் இருபாலார்தம்மில், உயர்ந்தாரிவர் தாழ்ந்தாரிவர் என வகுத்தல் அறியாமையிற் பிறந்த ஆராய்ச்சியாகும். ஒரு பொருளிற் கில்லாத குணம் மற்றொருபொருள் பெற்றிருக்கக் காண்கிறோம். ஆடவனோடு பிறவாச் சில நலங்களை மகளிரிடமிருந்து பெற்று அவன் சிறப்படைகிறான். அவளுக்கும் அவ்வாறே. எனவே ஒருவருக்கு மற்றவர் இன்றியமையாத் தன்மையில் தொடர்ந்து வருகின்றனர். இந்நிலையில் உயர்வும் தாழ்வும் நமது சிறுமையால் நினைப்பதேயன்றி, உண்மையில் அவ்வாறு ஒன்றுமில்லை என்பது விளங்கவில்லையா? தானொன்று கொடுத்துப் பிறிதொன்று வாங்கியே இருபாலாரும், வாழ்க்கை நலம் எல்லாம் எய்துகின்றனர்.

இனி, ஆணுக்கும் பெண்ணுக்கும் இயற்கையிலேயே வேறு யமைந்தகுணங்களின் தன்மை என்னவென்று பார்ப்போம். புருட சக்தியோ, செய்யும்வினை தேடிச் செல்வதும், செய்வதும், செய்ததைக் காப்பதுமாகும். அவன் புதியன தேடுவதும், தேடியதைப் பெற முயலுவதும், போரும், வெற்றியுமான வேலைகளை மேற்கொள்கிறான். பெண்ணின் சக்தியோ போரையும் பூசலையும் தேடுவதில்லை. இருந்தவிட மிருந்து அமைதியேயான ஆட்சி செலுத்துவதே பெண்பாலார் இயல்பு. புதி

யன நாடிப் பாய்வதில்லை அவள் மனம். கண் கண்ட பொருள்களைக் கொள்வதும் கவர்வதும் பெண் இயல்பில் இல்லவேயில்லை. ஆனால் பொருளின் இடத்தையும், தன்மையும் தேர்ந்து மகிழ்கிறாள். பெண் அவள் செய்யும் வினையும், வெற்றித் திருவைப் பற்றிய கையனாய் வரும் கோமகனுக்குப் புகழுரை தருவதும் பூமாலை சூட்டுவதுமாகும். வழக்கில் புகாது வெற்றி மாலையை உரியவனுக்கு அளிக்கும் நியாயாதிபதியும் அவள். செய்வினையால் தனதாகப் பெற்ற ஸ்தானத்தாலேதான், எல்லாவித ஆபத்தினின்றும் புருஷர்களால் காப்பாற்றப் பெறுகிறாள்.

புருடனோ தனது இயற்கைக்கேற்ப வெளியிடத்தில் முரட்டுக் காரியங்களையே கையாள்கின்றான். அதன் பயனாகப் பல கஷ்டங்களும், ஆபத்துக்களும் அவனைச் சுற்றிக் கொள்ள, அதனால் வெற்றியும் தோல்வியும் கோபமும் தவறும் அவனுக்கு இயல்பாகின்றன. அடிப்பான், பலமுறை காயமடைவான், அடக்கப்பட்டுக்கொள்வான், தவறான வழியிலும் செலுத்தப் படுவான், எனவே அவன் எப்பொழுதும் கல்நெஞ்சம் படைத்தவனாகின்றான். ஆனால் மாதரை மாத்திரம் எவ்விதத் துன்பமும், தொல்லையும் ஆபத்தும் யணுகாவண்ணம் தன்னுயிரையும் மதியாது அவன் காக்கக் காண்கிறோம். மனைவியே மன்னி ஆளும் ஒருவன் இல்லத்தில், அச்சமும் ஆபத்தும் அவளே விரும்பி யழைத்தால் அன்றி நுழைவது இல்லை, சரதம் இது. ஆதலால் அவள் உறையுமிடத்தில் குழப்பமுமில்லை, நெஞ்சக் கலக்கமில்லை, கோபமுறவும் தவறுதற்கும் காரணமும் இல்லை, கண்டீர். இதுதான் பெண்காக்கும் வீட்டின் மெய் இயல். சாந்தியின் இருப்

பாகும் அவ்வறச் சாலேயில் அச்சமும் ஐயமும், கேடும் கலக்கமும் எங்ஙனம் புகக்கூடும்? வெளியிடத்து அல்லல் களும், விரும்பத் தகாதார் கூட்டமும் நாட்டமும் வீட்டி னில் நுழையுமேல் அப்பொழுதே வீடு தனது மெய்யான இயலே இழந்து விடுகிறது. மேற்கூரையும், மடைப்பள்ளி யும் இருந்தும் அது வீடாகாது; வெளியிடத்தின் ஒரு பகுதியே யாகும். தூய்மைக்கு இருப்பிடமாய், இல்லறம் நடத்தும் யாகசாலேயாய், வாய்மைவைகிய கோயிலாய் இருக்கும்வரைதான், அடுப்பும் கூரையும், வெஞ்சுரத்தி னிடையுள்ள பாறைநிழல் போலவும், புயலில் தடுமாற் றங்கொண்டு தவிக்கும் மாலுமிக்குத் தீபஸ்தம்பம் போல வும் இருந்து வீட்டின் மெய்த் தத்துவத்துடன் விளங்கு கின்றன.

கூரையுஞ் சுவருமாயினும் சரி, அது வெட்ட வெளி யாயினும் சரி; எங்கெங்கே உயர்குண மங்கை யொருத்தி மனேயாட்டியாக விருக்கிருளோ அங்கெல்லாம் • 'வீடு' இருந்தே தீர்கின்றது. அடுப்பும், கூரையும் அவசிய மில்லே. விண்மீன் செறிந்த வானமே அவள் தலேக்குமே லிருந்தாலும், மினுமினுப் பூச்சியே விளக்கா யமைந்தா லும், புல்தரையே மணியாசு செய்த கூடமாய் விளேந்தா லும் உத்தமி இருக்கு மிடமெல்லாம் வீடேதான். மாடி வீட்டினும், வர்ணம் பூசிய சுவரினும் சிறக்கச் சீரிய பெண்ணொருத்தி தானிருக்குமிடமெல்லாம் ஒளியும் அமைதியும் காப்பும் தந்துதவுகின்ருள்.

ஒரு பெண்ணின் இடமும் தன்மையும், அவளது கருமமும் இவைதான் என்பதை இனியேனும் ஒத்துக் கொள்ளமாட்டீர்களா? மேலே கூறியவாறு அவள் தனது

ஸ்தானத்தைச் சிறக்கச் செய்ய தவறியும் அவள் தவறு செய்ய முடியாதவளா யிருக்கவேண்டு மல்லவா? அவள் ஆட்சியின்கீ ழுள்ளதெல்லாம் சரியாயிருக்க வேண்டு மெனின் அவள் தூய மனத்தையும் உயரிய வாழ்க்கை யையும், அறிவையும் பெற்றிருத்தல் அவசியமன்றோ? அறிவும் தன் புருஷனை அடக்கி வைப்பதற்கல்ல, சமயம் வரின் தன்னையே துறக்கவும் சித்தமாயிருக்கும் மனநிலை ஏற்படவேதான். அப்பொழுதுதான் அவள் புருஷன் பக்கத்தை எந்நிலையிலும் விட்டு நீங்கா வழித்துணைவி யாய், வாழ்க்கையின் விளக்காய் அமைதல்கூடும்.

பெண்களுக்கியன்ற இடமும் செல்வாக்கும் அவ ரது அரசாட்சியின் தன்மையும் ஈதென இதுவரை முயன்றுரைத்தேன். இனி, அவர் தமக்கமைந்த நிலை எய்தி வழிமுறை வழுவாது வினையாற்றும் தகுதியுற எத்தகைய கல்விப்பயிற்சி அவர்களுக்கு உதவியாய் நலம் வளர்க்கும் என்பது பற்றிச் சிறிதிங்கு ஆராய்வோம். பெண்கள் தன்மையைப் பற்றிய முடிவான வாய்மை, நான் இதுவரை முயன்று காட்டிய அதுவே என்று ஏற் பீரேல் மடவார்தம், தொழிலிற்கும் நிலைமைக்கும் ஏற்ற வாறான கல்விமுறை எதுவெனத் துணிதல் அரிய தொரு கருமமன்று.

மெய்ந்நலம் திரண்டு வளரவும், அரும்பிய அழகு உயிர்ப் பொலிவுடன் மலரவும் போதிய தேகப் பயிற்சி அவர்க்குத் தருதல் ஆண்பாலார், பெண்பாலார் மாட்டு ஆற்றவேண்டிய கடமைகளில் முதன்மையானதாகும் என் பதை அறிவுடைப் புருடன் எவனும் மறுக்கமாட்டான். உடல் சிறிது உரமுறாது பெண்ணுருவம் மேன்மையும் அழகும் பெற்றதில்லை. தோலும் எலும்புமாய தேகம்

அழகுடன் தோன்றுவது உண்டோ? பெண்மை சிறக்கவும் அதன் வன்மை பெருகவும் தேகப்பயிற்சி ஓரளவு அவசியம். ஆனல் அப்பயிற்சியும் அளவுகடந்து நிகழ்வதும் கூடாது. தேகப்பயிற்சியுடன் நிற்றலும் போதாது. உடலின்வன்மையால் மாத்திரம் அழகுசிறந்ததில்லை. உள்ளத்தை விரியச்செய்யும் மனப்பயிற்சியும் பெண்கள் பெறவேண்டும். ஆதலால் ஆணேபோல் பெண்களுக்கும் தேகப்பயிற்சி பெறவும் மனப்பயிற்சி பெறவும் எல்லா உரிமையுமுண்டு என்பதை உணர்மின்.

நீராகி எருவாகிப் பெண்களின் உள்ளத்தை வளர்ப்பதும் உவகை உணர்ச்சியே (Vital feelings of Delight) யாகும். இயற்கையோடு இயன்ற உவகையுணர்ச்சி யூடேபயின்று வளராத சிறுமியிடம், அழகும் உயிர்ப்பொலிவும் காணுதல் முயற்கொம்பாம். சிறுமியொருத்தியின் இயற்கைவளர்ச்சிக்கு இடையே நீ வகுக்கும் தடைகளும், 'விதியிது விலக்கிது' என்ற வரையறுப்பும், அவள் எழிலைக்கொன்றழிக்க அவளது உறுப்புதோறும் அவ்வடு அழியாதவகையில் பதிந்துவிடுகிறது. அதைப் பின்னர்ப் பார்க்கவும் நமகண் கூசும். இத்தகைய நிபந்தனையில் வாழும் சிறுமி ஒளியை யிழந்துவிடுகிருள். அவளிடம் நாம் காணுவதும், உயிர்ப்பொலிவிற்குப் பதிலாக, வாடிக்கிடக்குஞ் சவக்குறியே. எனவே உடல்வலியிலும் அழகிற்கு முக்கியமானது மனதின்வளர்ச்சியேதான்.

மாதரார் முகத்தின் மாசிலா வனப்பு யாதனின், முன்னுள் பண்பும் பயனுமுடைத்தாய பல்வாண்டுகள் கழித்தவோர் நினைவின் அழகு உள்ளத்தினின்று வெளித்தோன்றுவதாம். அதுவன்றி, இனிவரும் நாட்களெல்லாம், இன்

னும் பலபல ஒண்பொருள் பெற்றுத் தாம் பிறர்க்களிக் கும் பாக்கியம் உறுவதற்குளது என விளையும் நம்பிக்கைக் கிடனுய வீறுடைக் குழந்தைத் தன்மை இலங்குவது மல்லாது வேறென்றுளதோ? இந்தவித நம்பிக்கை இருக் கும்வரை அவர் முதுமை என்பது ஒருநாளும் எய்தார். நிரந்தரமாய் நிலைத்திருக்கும் இளமை யிது.

முன்னுண் முற்றிய நல்வினைத் தேசும்
பின்னு ளெய்தும் பெரும்பயன் நினைவும்
அகத்துள் விளைய வவைதாம் தோற்றம்
முகத்திற் காட்டும் முறையது வனப்பே.

எனச் சாற்றுவார் கவிகள்

எனவே, பெண்கள்மாட்டு நீங்கள் செய்யவேண்டிய கருமம் இரண்டு. முதன்முதலாக அவர்களுக்குத் தேகப்பயிற்சி தந்து உடல் உரம் பெறுமாறு செய்தல் வேண்டும். பின்னர்த் தரவேண்டுவது, அவர் உளங் கனிந்து குணம்சிறக்கச் செய்யும் மனப் பயிற்சியாகும். பின்னதைச் செய்ய வல்லது கல்வியே.

மாதரார் அறிவளிக்கும் கல்விகற்பது ஏனெனில், ஆடவர் புரியும் தொழில் தெரிந்து அவருக்கு உற்ற துணையாய் எவ்விடத்தும் நின்று வாழ்க்கையை இனிது நடத்துவதற்குத்தான். மங்கையர் கல்வி பெறுவது வாய் விவகாரம் செய்வதற்கல்ல விஷயத்தின் வாய்மை உணர்ந்து, நல்லது இது கெட்டது இது என்று அவர் துணியத் துணை செய்யவே கல்வி வேண்டும். பாஷை பலகற்று, வந்தவரை வாய்கொண்டு மருட்டிவிடும் புலமை பெண்ணின் பெருமையையோ உள்ள நிறைவையோ காட்டிவிடாது. ஆனுல் தன் வீடுவந்த விருந்தினர் ஒரு

வருக்கு நல்வரவு கூறி வரவேற்று உபசரிக்கவும், அவ ருடன் வார்த்தையாடி அவர் கூறுவது அறியவும் மறு மொழி இயம்பவுந்தான் பாஷைப் பயிற்சி வேண்டும்.

பௌத்திக சாஸ்திரங்களில் பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்பது மாதர்தம் யோக்கியதைக்கும்பெருமைக் கும் அவசியமேயில்லை. ஆனால், விஷயங்களை அவள் ஆழ்ந் துணர்ந்து ஐயம் திரிபின்றிக் கருதவல்ல பயிற்சி பெற் றவளாதல் வேண்டும். இயற்கை விதிகளின் (Natural Laws) நிரந்தரத் தன்மையையும், நீக்கமற்ற நிலையையும், நேர்மை யழகையும், அவைதம் அர்த்தம் யாதென்பதை யும் தெரிந்துகொண்டு, சாஸ்திரத் துறைகளில் யாதானு மொன்றைத் தொடர்ந்துசென்று, அகங்காரங் கழியுமாறு அமைந்து அடக்கமே திகழ்கின்ற தாழிடம் எய்தும் வரைப் படர வேண்டுவதே இன்றியமையாதது. அத் தகைய தாழ்மை புகட்டும் அடக்கத்திற்கு எய்தவல்லார் அறிவிற் சிறந்தோரும் வீரம் மிகுந்தோருமே யாவர். பல கற்றோரும் யாமென்று தற்புகழ்ந்த பேரெல்லாம் பின் னும் கற்கக்கற்கத் தம் கல்லாமையே கண்டு, அலகிலாப் பெருந்துறையிற் சிறுகற்கள் பொறுக்கும் பாலகரே தாம் எந்நாளும் ஆவதனை விளம்புகின்ற இடமன்றோ அது!

இந்தப் பட்டினம் எந்த இடத்தில் இருக்கின்றதென் றும், சரித்திர சம்பவங்கள் எதுவெது எந்தக் காலத்தில் நிகழ்ந்தன வென்றும், பேர்படைத்த பெருமக்களின் கணக்கும் அவளுக்குத் தெரிந்தாலென்ன, தெரியாமற் போனாலென்ன?—மகளிரை யோர் அகராதியாக மாற்றி விடுவதற்கல்லவே அவர்கள் படிக்கின்ற படிப்பு. சரித் திரம் கற்பாளென்றால், அதனுள் தனது ஆன்ம உணர்ச்

சியைச் செலுத்தக் கூடியவளாய் இருத்தல் வேண்டும். பரிவுடன் பாராட்டவேண்டிய சம்பவங்கள் எத்தனையோ சரித்திரங்களில் இருக்கின்றன. நாடக நிகழ்ச்சியாய் வரன்முறை உறவுகள் சரித்திரத்தில் இருப்பன கணக் கில. ஆனால், சரித்திரகாரர் பெரும்பாலும் முன்னதைத் தம் தர்க்கவாதத்தால் மறைத்தும், பின்னதை வரிசை அமைப்பினால் பிறித்தும் விடுகின்றனர். எனினும் சரித் திரம் பயில்கின்ற மாதர் அவைகளைத் தம் நுண்ணிய உணர்வினால் கருத்தினுள்கொள்பவர் ஆதல் வேண்டும். சரித்திர சம்பவங்களை வாசகத்தின் உதவிகொண்டு தம் மனோபாவத்தில் சித்திர மமைத்துநோக்க வல்லராய்க் கற்ற மாதரே சரித்திரங்களின் உயிர்நிலையைப் பற்றியவர் ஆவர். இட்டார்க்கு இட்டபலன் என்னும் தெய்வ விதியின் தருமம் சரித்திர சம்பவங்களுள் மறைந்து கிடப் பினும் அதனைத் தொடர்ந்து செல்வதற்கும், தன்வினை தன்னைச் சுடுமாறு அமைந்த நீடிய நெருப்பின் நூல்கள் தீமையோடு துன்பத்தைப் பிணைத்துப் பின்னி நெய்து கிடப்பதைச் சரித்திர அந்தகாரத்துள் காண்பதற்கும் உரியவள் அவளே. அல்லாது, சரித்திரமென்பது பண்டைநாள் நிகழ்ச்சிகள்மாத்திரம் என்று எண்ண லாகாது. அன்றன்று அவளுக்கு அமைதியோடு கழி கின்ற ஒவ்வொரு நிமிஷமும் சரித்திரமாகவே தீர்கின் றன. இதன்பாலும், அவளோடு ஒரே காலத்தில் உடன் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளின்பாலும் அவளது பரிவு நிறைந்து பரவுதல் வேண்டும். இந்நாள் நிகழ்கின்ற துன்பங்களுக்கு ஏற்றவாறு பரிவுகூர்ந்து துயருறு வாளாயின் பின்னுள் அவை தோன்றுவே. அவள்

கண்களிற் படவில்லையாயினும் நாடோறும் எங்கும் நிலவி வருத்துகின்ற கஷ்டத்திற்கு எதிரில் அவளைக் கொணர்ந்து நிறுத்தினல், பிறகு தன்னுடைய கருத்தும் செய்கையும் எவ்வகையனவாகும் என்று ஊகித் துணருமாறு அவள் மனோபாவத்தைப் பயிற்சி செய்துகொள்ள வேண்டும். தனது வாழ்விற்கும் அன்பிற்கும் இடனுய இச்சிறு உலகமும் சுற்றமும், கடவுளின் வாழ்விற்கும் அன்பிற்கும் பாத்திரமாய அண்டகோளகைகளும் மன்பதைத் தொகுதியும், ஆகிய இவ்விரண்டு விஷயங்களையும் அளவினுல் சீர்தூக்கிப் பின்னதைக் கருதுங்கால் முன்னது இல்லதென்றே என்னும்படியாய தன்மையை அவள் அறியுமாறு போதிக்கும் போதனை அவளுக்கு மிகச் சிறந்து உரியதாகும். கடவுளைக் குறித்துச் செய்யும் பக்தி, தனது நினைவினிலடங்கும் மாந்தர் தொகை அதிகமாவதற் கேற்பக் குறையலாகாது. புருஷனுக்கும் பிள்ளைக்கும் உற்ற சிறு துன்பத்தைத் தீர்க்குமாறு தெய்வத்தை நோக்கிச் செலுத்தும் பிரார்த்தனையின் தீவிரம், ஏனென்று கேட்பாரின்றித் துயரால் தவிக்கின்ற எண்ணிறந்தோர் குறைகளைக் கருதிச் செய்கின்ற பிரார்த்தனையின் ஊக்கத்தில் ஓரளவும் தணியாது வளரப் பயில்வதற் குற்றனவே அவளுக் குரியனவாம். நிர்க்கதியாய்த் தாழ்வுற்றழங்கும் மாந்தாடங்கலும் நம் பிரார்த்தனைக்குப் பாத்திரராவார்.

கல்வியால் பயிற்சியுறு மனப்படைத்த பெண்ணுவாரெவரும் பெருமையேதும் பெற்றதில்லை என்று இதுகாறுங் காட்டி வைத்தேன். இனி, அவர்க்கு உரிய கல்வியின் தன்மையைப் பார்ப்போம். கல்வியின் போக்கும்,

கற்பிக்கக் கையாளும் சாதனங்களும், விஷயங்களும் அநேகமாய் ஆடவர்க்கமைந்ததைப்போலவேதான்பெண்க ளுக்கும் இருக்கவேண்டும். ஆனால் அமையவேண்டிய வேறுபாடு கற்பிக்கும் முறையிலுளது. இதைச் சிறிது விளக்குவேன். பெண்ணொருத்தி பெற்ற குலச்சிறப்பும் குடிச்செல்வமும் எதுவாயினும் சரி, நாயகனுக்குத் தெரியும் ஒன்றை அவளும் அறியும் ஆற்றலுடையாளாய் இருக்கவேண்டும். ஆனால், ஆற்றல் ஒன்றாயினும் அறியும் தன்மையில் வேறுபாடுளது. புருடனது அறிவு காணும் பொருளினுட் சென்று, மூலத்தை உணர்வதும், வளர்ச்சியைப் பெறுவதுமாகும். பெண்ணறிவின் தத்துவம் அதுவன்று. விஷயத்தின் பொதுஅறிவைப் பெறுவதும், தினசரி வாழ்க்கையில் உபயோகமா யமைவதற்குப் பயிலுவதுமே பெண்கள் கல்வியால் பெறவேண்டிய பேறு. ஆடவன் பெண்களின் வழியில் கற்பதும், கற்றுத்தான் சமூகத்தின் ஊழியக்காரனாய் அமையப் பழகுவதும் கூடாதென்பதன்று என்கருத்து சாத்திர நூலாயினும் இலக்கியமாயினும் கற்பன சரியே கற்கவேண்டும். கணவன் உவக்கத் தான் உவந்தும், அவன் வருந்தத்தான் வருந்தியும், அவனது உற்றார் உறவினர் எய்தும் சுகதுக்கங்களைத் தனதாகப் பாவித்து வாழத் தெரிதலே அவள் கல்வியால் பெறும் பயன்.

ஆனால் அரைகுறையான அறிவு பெண்களுக்குப் போதுமென நான் சொல்வதாக நீங்கள் கருதவேண்டா. அவளும் கற்பதெதையும் கசடறக் கற்கவே வேண்டும். பொருள்களைப் பற்றிய பொதுவான ஆரம்ப அறிவிற்கும் (Elementary knowledge) நுனிப் புல் மேயும் அரை

குறையான சோம்பலிற்கும் (Superficial knowledge) வேற்றுமை யுளதன்றோ ? பெண்கள் பெற வேண்டுவது உறுதியுற்ற முதலாய பொது அறிவு (A firm beginning). பட்டதும் படாததுமான வகையில் விஷயங்களைத் தெரிதல் (a feeble smattering) அன்று, அறியும் அறிவு. நல்லாள் ஒருத்தி, தானறிந்தது சிறியதேயானாலும், அச்சிறியதையும் கசடறக் கற்றிருந்தாற்றான் கணவனுக்கு வாழ்க்கையில் உற்ற துணைவியாய் இருத்தல் முடியும். அரைகுறையான ஞானத்தினாலும் வாய்மைக்கு மாறான பொருளறிவினாலும் கணவனுக்கு இடர் செய்து, மனவருத்தமேதான் அவள் தருவாள். பின்னர் வாழ்க்கையில் இன்பத்திற்கும் அமைதிக்கும் இடமேது ?

உண்மையே நோக்கின், ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்விமுறையில் ஏதாவது வித்தியாசம் இருக்கவேண்டுமெனின், அதுவும் இதுவேயாகும். ஆடவர் மனத்தினும் மங்கையர் மனம் ஆழ்ந்ததும் நுண்ணியதுமான பெரிய விஷயங்களை அறிவதற்கான முதிர்ச்சியைச் சீக்கிரத்தில் பெற்றுவிடுகிறது. எனவே, கல்வித் துறையில் பெண்பாலார் விரைந்து அழைத்துச் செல்லப்படலாம். மேலும் மங்கையர் மனம் ஆடவ னதினும் கூர்மையும், பெரிய விஷயங்களை இலகுவில் கிரஹிக்கும் தன்மையும் உடையது. எனின் இத்தகைச் சிறப்புடைய அவள் மனதில் பொறுமையும் அடக்கமும், விளையாட்டுத்தனம் அற்ற தன்மையும் வளருமாறு செய்யவும், உயரிய நோக்கமும் தூய சிந்தனையும் ஏற்படுமாறு உதவவும் ஏற்றதான இலக்கியங்களே அவள் கற்றற்குரியன. இவ்வண்ணம் முடித்தலால்

நான் பெண்களுக்குரிய புத்தகங்கள் எவை என்பதைக் கூறப் புகுந்துவிட்டதாகக் கருதவேண்டா. குற்றக் கடல் புரளும் திரைதெறித்த நுரையும் காயாத வாசகச் சாலைப் புத்தகக் கட்டுகளிலிருக்கும் பேரளவில் நூலாகும் காகிதக் குப்பைகளை நங்கைமார் படிப்பதற்கென்று அவர் முன் குவித்து விடாதீர் என்றே இங்குக் கூற விரும்புகிறேன்.

நிற்க, சாமர்த்தியம் உறைவிடமாய் அமைந்த நூலாயினும் சரியே! அதுவும் வேண்டற் பாலதன்று. படிக்கப் படிக்க வேட்கையை அதிகரிக்கும் நாவல் என்னும் கற்பனைக் கதைகளை எடுத்துக்கொள்வோம். அச்சாமர்த்திய நூல்களில் இருக்கும் விஷயத் தாழ்மையால் அன்றுநாம், அதைக்கண்டு அஞ்சவேண்டியது. அவைகளில் காணப் படும்நிகழ்ச்சிகளின் மிகைப்படக்கூறியிருக்கும்திறமையே தான் (The over-wrought interest) நாம் அஞ்சுதற் குரியது. சொல்லும் திறமும் சுவையு மில்லாச் சாதாரண நூலை எடுத்துக்கொள்வோம். வீணை ஊக்கம் வளர்த்துக் கட்சிகளை உண்டாக்கும் சமயச் சார்பான பிரசுரங் களைப்போல் அது அவ்வளவு தாழ்ந்ததன்று. சிறுமையே யான கதைகளும், பொய்மைவாய்ப்பட்ட தேசசரித்திர வியவகாரத்தையும் பூசல்களையும் விளக்கும் அரசியல் பிரசுரங்கள்போல் அவ்வளவு படுகேடு புகுத்தா. சுவை நிறைந்து சிறந்த நூலேயானாலும் அவைதாம் தூண்டும் பொய்க் கற்பனைகளால் மனதை வேறுபடுத்தி வாழ்க் கையைக் கெடுத்து விடுகிறது. அந்நூல்களைப் படித்த மாதருக்கு அத்தகைய அசம்பாவிதங்களுக்கு இட மில்லா வாழ்க்கையில் சுவாரஸ்யமொன்றும் ஏற்

படுவதில்லை. தினசரி வாழ்க்கையில் சம்பவிக்க முடியாத நிகழ்ச்சிகளில் தாம் கலந்து நடிக்க வேண்டுமென்னும் எண்ணம் கொள்கின்றனர். இத்தகைய வேட்கையை அளிப்பதால்தான், அந்நூல்கள் கேடு விளைக்கும் தன்மையனவென்று கூறுகிறேன். ஆகவே நான் விலக்கச் சொல்வதும் சுவாரஸ்யம் நிறைந்த சாமர்த்திய நாவல் நூல்களே.

இந்நாளில் (19-வது நூற்றாண்டில்) இத்தகைய நூல்கள் மலிந்துள்ளன. கூறுமிடத்து இந்நாவல் நூல்கள், மானுட ஒழுக்கத்தின் தன்மையையும், மனிதவுள்ள இயல்பின் பொதுவிதியையும் விளக்க வந்தவையேயாகும். என்றாலும், இவை செய்யும் இவ்வுதவிக்கு நான் மதிப்புக்கொடுக்க முடியாதவனாக இருக்கின்றேன். மேலும், நூல் கொண்ட நோக்கம் நிறைவேறும் வண்ணம் படிப்பவர் கருத்துடன் படிப்பதில்லை. மற்று அவை, படிப்பவர்க்குச் சாதித்து வைப்பதும், சிறிது இளகிய நெஞ்சம் படைத்தாரது ஈகைக் குணத்தையும் கொடுமையே குடிகொண்டார் சிறுமையையும் சிறிது விரித்து வைப்பதே அல்லாது வேறென்ன ? இயற்கையில் அவரவர்க்கமைந்த நெஞ்ச நிலைக்கேற்றவாறு அன்றோ, மகளிர் நாவல் நூல்களினின்றும் ஆகாரம் சேகரிப்பார்கள். சிறுமைக்குணம் படைத்த கீழ்மகள் அவள் இயற்கைக்கு ஏற்பத் தாக்கரே (Thackeray) ஆக்கிவைத்த நூலினின்று கற்பதும் மானுடச் சாதியை வெறுக்கவேதான். நெஞ்சத்தில் ஈரமும் மென்மைக் குணமுமுடைய மகள், மாந்தர் அல்லல் கண்டு வருந்தவும், ஆழமிலா மேலோட்டப் பார்வையுளார் நகைத்துச் செல்லவுமே கற்கின்றனர்.

நாமொருகால் மக்களைப் பற்றித் தெளியாதிருந்த உண்மையொன்றை இந்நூல்கள், நம்முன் மிகமிகத் தெளிவாய்க் காட்டிவைக்கும் வன்மைகொண்ட வகையில் அவை சிறந்தவே. ஆனால் சொல்லும் வாய்மையை மிகைப் படுத்தியும் வடிவுதந்தும் கூறும் வன்மை அவைகளிடம் அதிகம். கற்பனைக் கதை சொல்லுவதில் வல்லவர்களும் அதன்பாற் பட்டுவிடுகின்றனர். நமது கொள்கைகளும் ஒருதலைப்பாடமைந்து உரமும்வேகமும் எய்துகின்றன. இவ்வண்ணம் வந்துறும் மாறுபாடும், அது பெற்ற வேகமுள்ள வலிமையும் நன்மையினும் கெடுமையையே பயக்க வல்லதாகும் என்பதை உணர்மின்.

இயற்கையிலேயே உயரிய குணம் படைத்த பெண்ணைச் சிறுமை நிறைந்த நாவல் என்னும் நூல்கள் எதுவும் செய்து விடாது. ஆனாலும், பொதுவாய்ப் பெண்கள் அந்நூல்களைப் படிப்பதால், சிறுமைக் குணங்களையே பெறுகின்றனர். எனவே வர்த்தமானப் பத்திரிகைகளையும், மாத சஞ்சிகைகளையும், நாவல் நூல்களையும் மாதர் கண்களில் காட்டக்கூடாது. பண்டை இலக்கியங்கள் நிறைந்த வாசகசாலைக்குள் அவர்களைப் பயப்படாது புகச் செய்யலாம். 'இது படிப்பதற்கேற்றது' என்றும், 'இது கெட்டது' என்றும் பண்டை நூல்களைப் பற்றிய வரையில் பாகுபாடுகள் செய்யத் தேவையில்லை. அவ்விலக்கியங்களில் ஒருத்தி பழகிவரின், பின்னர் நீங்கள் அவளுக்கு வேறொன்றும் செய்யவேண்டுவதில்லை. தகுந்தது எது, தகாதது எது, என்பதைத் தெரிந்து படிக்கும் ஆற்றல் பெண்களுக்கு உண்டு. இந்த விஷயத்தில்தான் ஆணுக்கும்பெண்ணுக்கும் உள்ளவித்தியாசமும் தோன்றலாகும்.

சிறுவன் ஒருவன் குணத்தை நீங்கள் மெல்லமெல்ல நயத்திலும் பயத்திலும் பண்படுத்தக் கூடியதுபோல் சிறுமியின்பாற் செய்ய முடியாது என்பதைத் தெரியுமாறு வேண்டுகிறேன். சிற்பி ஒருவன் தான்பெற்ற கைவண்ணத்தின் வண்மையால், கரடு முரடான சமனற்ற கல்லில் கண்ணும் மனமும் ஒருங்கே கவரும் உருவத்தைத் தன் உளியும் சுத்தியும் கொண்டு அமைப்பதுபோல், முயற்சியால் சிறுவனை நீங்கள் சீர்பெறச் செய்யலாம். ஒருவன் இயற்கையிலே சிறிது நல்ல குணங்களைப் படைத்தவனு யிருப்பின், கல்லினும் பலமடங்கு சிறந்ததான வெண்கலத்தில் உருவங்கள் சமைப்பதுபோல் இலகுவில் அவனைச் சீர்திருத்தி விடலாம். பெண்களை மாத்திரம் அவ்வாறு செய்தல் கூடும் என்று நினைப்பது அறியாமையே யாகும். பெண்ணோ ஒரு மெல்லிய மலர்போல்வாள். சுத்தியும் உளியும், அவளிடம் செல்லா. கசக்கிய மலர் மணப்பதில்லை. அவளது வளர்ச்சிக்குச் சிறிது ஒளியும் காற்றுந் தான் வேண்டும். மற்று அவளே வளர்ந்துகொள்வாள். நீங்கள் அவள்பால் செய்யவேண்டியதும் சிறிதுஉதவியே. எத்துணையும் விதிக்காது விலக்காது, அவள் போம்வழி கூடச் சென்று முள்நிறைந்த காட்டில் புகாது பார்த்துக் கொள்வது போதும்.

ஆகவே, புல்நிறைந்த தோட்டத்தில் நீங்கள் அருமையாக வளர்க்கும் மானொன்றை இஷ்டம்போல் திரிந்து, வேண்டிய உணவை வேண்டியபடி தேடிக்கொள்ளச் செய்வதுபோல், பண்டைக் காவியங்கள் நிறைந்த புத்தக சாலையில் நீங்கள் பெற்றெடுத்த மானனைய பெண்ணைவிட்டு விடுங்கள். அவளிஷ்டப்படி படித்துத்

தனக்கு வேண்டிய பயிற்சியைப் பெற்று வளர்வாள். நல்லது கெட்டது அறிவதில் புருடனினும் இருபது மடங்கு அதிகமான வன்மையை ஆண்டவன் அவர்களுக்குத் தந்துள்ளான்.

சொற்கொண்டு நம் நெஞ்சினை அள்ளும் இலக்கியப் பயிற்சியுடன் அவளுக்கு மற்றக் கலைகளின்பயிற்சியையும் கொடுத்தல் அவசியமாகும். அவைதாம் கன்னின்று நம்கை வண்ணத்தால்பிறந்து நம்முடன் உறவாடும்சிற்பமும், அங்கங்கள் அசைவதால் கண்ணிற்குச் சுவையையும் மனத்திற்குப் பொருளையும் தந்துதவும் நடனமும், ஒலித்திரள் கொண்டு மாந்தர் நெஞ்சுருக்கும் கீதமும் ஆகும். இத்துடன் ஆன்ம அறிவு நல்கும் மதோபதேசங்களும் செய்து வைத்தால், வாழ்க்கைச் செயலிலும் நினைவிலும் தன்னயம் என்பதுபோய் மெய்யறிவு அவள்பால் வேரூன்றி வளரத் தலைப்படும். பின்னர் அவளுக்கு வேண்டுவது என்னை? பயனை கருதிச் செய்தல் என்னும் லோகாயதர் தத்துவம் அவளிடம் செலவு பெற்றுச் சென்று விடுகின்றது. செல்லவே, நாம் முன்னே கூறிய வண்ணம் அவள் சிலம்பொலிக்கச் சீரடிபெயர்த்து நடமாடிச் செய்யும் வினையெல்லாம் மாமலராய், தேன் ஒழுகு தீங்கனியாய், மெய்ச்சுவை முதிர்ந்த உவகையேயாய், வளராளோ, சொல்லுங்கள்.

இதுவரை, மாதரார் பெற்றுள்ள இயல்பிற்கு ஏற்ற கல்வி முறையையும், அன்னார் தம் மனையையாளும் தன்மையையும் தெரியப் பார்த்தோம். இனி, வீடொழிந்த வெளியிடத்தில் அவர் ஆற்றுதற்கான கருமந்தான் என்ன? அக்கருமத்தின் தன்மையும் எதுவென்பதே

நமது முடிவான கேள்வி. அக்கேள்விக்கு விடைதேடிப் புகுவோம்.

ஆடவர்தம் கருமம் வெளியிடத்தையும் பெண்களின் கருமம் வீட்டின் உள்ளிடத்தையும் பற்றியது என்பதே நாம் கொண்டுள்ள பொதுவான கொள்கையாகும். ஆனால் அக்கொள்கை உண்மையில் சரியானது அன்று. புருஷன் ஒருவன் குடும்ப நிர்வாகத்திற்கான சில வேலையையும், சில கடமையையும் கொண்டுள்ளான். அத்துடன் அவன் வேலையும் கடமையும் முடியவில்லை. நாட்டின் நலத்திற்கும், சமுகத்தின் சுகத்திற்கும் ஏற்றதான வினைகளும் சில அவன்புரிவதற்குள. அதுவேபோல் வீட்டிலும் வெளியிடத்திலும் வேறான தன்மை வாய்ந்த வினை சில மங்கையரும் ஆற்றுதற்கு உண்டு.

குடும்பத்தை எடுத்துக் கொள்வோம். குடும்பத்தினுள் பகையொன்றும் புறமிருந்து வாராது காப்பதும், பொருள் தேடுவதும், ஆடவனுக்குரிய தொழிலாகும். தேடிவைத்த பொருள்கொண்டு குடும்பத்தில் ஒழுங்கும் இன்பமும் அமைதியும் கலந்துறையச் செய்யுந்தொழிலைப் பெற்றுள்ளார் தெரிவையர்கள். இவ்வண்ணம் ஆண்தொழிலும் பெண்தொழிலும் ஒன்றாத காலத்துக் குடும்பமுமில்லை, வாழ்வுமில்லை.

வெளியிடத்தும் இவ்வாறே தத்தமக்குரிய தனித்தொழிலைப்பெற்றுள்ளார் இருபாலாரும். நாட்டைஒழுங்குபட ஆளுதற்குத் துணையிருப்பதும், பிறநாட்டார்உட்புகுந்து அதன் அமைதியைக் குலைக்காவண்ணம் தன் புயவலியால் காத்தளிப்பதும், நாட்டின் வளர்ச்சிக்கான கருமம் புரிவதும் ஆண்மகன் தனதாகப் பெற்ற வேலை. மாத

ரும் அத்தகைய வேலை யொன்றை வெளியிடத்திலும் பெற்றுள்ளார். தானுறையும் வீடேபோல் தான்வாழும் நாட்டினிடம் அழகும் ஒழுக்கமும் ஒருங்கே மலரத் தொழில் புரிதல் அவள் வேலை. அதாவது, கோட்டை வாயிலில் வாள் ஏந்தி நிற்பான் ஆடவன், கோட்டை யின் உள்ளிடமிருந்து வினைசெய்வாள் நங்கை.

அன்பு உணர்ச்சியேபோல், மாந்தர் உள்ளத்தின் கண், அரசச் செல்வாக்கைப் பெறும் உணர்ச்சி யொன்று இயற்கையாய் அமைந்துளது. இவ்வுணர்ச்சி தந்தவன் நீ யில்லை; ஆதலினால் அவ்வுணர்ச்சியை அகற்ற நின்றால் இயலாது கண்டாய். வேண்டுமானால் ஒன்று நீ செய்யலாம். பெண்களுக்கே உரியதான அவ்வுணர்ச் சியை இடைதடுத்துச் சரியான பாதையில் வளராது செய்யலாம். இவ்வண்ணம் செய்வதால் நன்மை யொன் றும் ஏற்படாது. மாதர் அவர்க்குரிய அரச வன்மை பெற்று அரசாட்சி செய்யும் ஆவலுக்கு இடைப்புகுந்த தடையெல்லாம் வாழ்வைக் கெடுத்து நாசப்படுத்தும். இவ்வுணர்ச்சிக்கு வித்திட்டு நீர் வார்த்து வளரச் செய்த வன் கடவுள். ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, அவரவர்க்கியன்ற செல்வாக்கைப் பெறுதலில் தவ றொன்றுமில்லை.

எனவே, ஆள்வதற்கு விரும்பும் பெண்ணின்மேல் வெகுளாதீர். மனிதன் நலத்தையொட்டி அவள் அந் நன்மையைப் பெறட்டும். அவ்வன்மைதான் என்ன பார்ப்போம். அவள் பெறும் வன்மையும் அழிப்பதற் கன்று. அழித்தல் தொழிலும் வன்மையுடன் பொருந் திய தில்லை. பெண்ணொருவள் புலி யுருவம் எடுக்க

வேண்டுமென்ப தன்று. யாக்கைக்கே இரைதேடும் கவந் தன் கையுமன்று அவளுக்கு வேண்டியது. சஞ்சலம் உற்றூர்பால் சென்று அவர் கலக்கம் தீர்ப்பதும், நோயுற் றூர் நோய் களைவதும், வருந்துவார் வருத்தம் துடைப்ப தும் திக்கற்று நிற்பார்க்கு வழி காட்டுவதும் காத்தளிப் பதுமான ஈகை நெறிக் குணங்களே அரச வன்மையின் இலக்கணமாகும். கோலும், நெடுங்கொடியும், மணிமுடி யும், எவருக்கும் அரச வைபவத்தைத் தந்ததில்லை. நல் லோரைக் காப்பதும், தீயோரைத் தண்டிப்பதும் அரசின் தொழில். நியாயத்தை அடிப்படையாய், கருணையை வழிப்படியாய்க் கொண்டுள்ள தவிசே சிங்காதனமாகும். இத்தகைய செல்வாக்கைப் பெற்று வீட்டிலும் வெளி யிடத்திலும் அரசிகளாய் நும்மங்கைமார் அமைய விரும் பீரோ, காளைகாள் சொல்லுங்கள்.

இவ்வண்ணம் வன்மைபெற்று வாழ்க்கையில் பொருந்திய மாதர்கள் இருக்குங்கால் உலகத்தில் தொல்லை யேது, துனியேது, கொடுமையேது, பூசலேது. உலகத் தில் நடக்கும் போர்க்கெல்லாம் காரணம் பெண்பாலார் தம் தொழிலை முறையே புரியாமையே. நடக்கும் போ ரெல்லாம் பெண்கள் தூண்டுதலால் நடப்பதாக நான் சொல்லவர வில்லை. போர் வராது காக்கவல்ல அவர் வன்மையைச் சரியே உபயோகிக்காததனுல் என்றே, சொல்லுகின்றேன். யுத்தம் செய்வதே மனித இயற்கை. ஒரு காரணத்தின்பேரால் சமர்க்களம் புகுவான் மனிதன். அன்னங்காள்! நீங்கள் அவன் பக்கம் நின்று 'செய்வதும் இது' 'விடுப்பது மிது' என வழிகாட்டி வருவீரேல், இக்

கடல்சூழ்ந்த வையகத்தில் கோபமும் தாபமும் இறந்து மடியாவோ. இத்தொழில்விடுத்து நான்குபக்கங்களிலும் சுவரால் சூழப்பட்ட வொரு தோட்டத்திற்குள் அடைத்துக்கொண்டு விடுகிறீர்கள். இதுதான் எனக்கு வியப்பைத் தருகிறது. உலகத்தில் நடக்கும் கொலையும், களவும், போரும், புன்தொழிலும் எனக்கு வியப்பைத் தரவில்லை. மக்கட்பேறு பெற்ற தாய்மார்களது வன்மை உண்ணும் நீரினும் உயிர்க்கும் காற்றினும் தூய்மையானது. கடலினும் மிக்க ஆற்றல் பெற்றது. அத்தகையாள் கைதீண்டப் பணியாத கணவனுண்டோ! அவள் பக்கம் வீற்றிருக்கும் காதலன் மனத்திடை சஞ்சலம் செல்லுமோ. இத்தகைய உங்கள் செல்வாக்கை போக்கிலே போகவிட்டுப் பக்கத்துவீட்டுப் பெண்ணிடம் என் பெருமை உன்பெருமை என்று பேசிக் காலம் கழிப்பதே எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

உங்கள் தோட்டத்தினுள் செல்கிறீர்கள். மலர்களுடன் விளையாடுகிறீர்கள். குழைந்தலையும் கொடி ஒன்றைத் தூக்கிக் கொழுகொம்பில் சுற்றுகிறீர்கள். உங்கள் தோட்டத்திற்கப்பால் உதிர்ந்த மலர்கள் எத்தனை யெத்தனை? காலடிபட்டுக் காய்ந்த ரோஜாக்கள் எத்தனை யெத்தனை? அறிவீரோ. இங்ஙனமிருக்கக் காலையிலும் மாலையிலும், உங்கள் முகத்தில் யாதொரு துன்பமும் தோன்றுதபடி மலர்களைக்கண்டு மகிழ்ச்சி யுறுகிறீர்களே! வெளியிடத்துவாழும் மலர்பால் உங்கட்குக் கருணையில்லையோ! நீங்கள் சுவரிட்டு அடைத்துக் கொண்டிருக்கும் தோட்டந்தான் பிரபஞ்சமேயோ! தூய்மை மனம் படைத்த

மாதொருத்தி நடக்கும் இடமெல்லாம் பட்டமரம் தளிர்க்கும், காய்ந்த மலர் மணக்கும், வாழ்க்கை சிறக்கும்.

காமச் சுழற்சியுற்ற காளை யொருவன் காதலிபால் புனைந்துரைக்கும் பொய்யுரை யென்று நான் கழறும் இவ்வார்வ மொழிகளைக் கருதாதீர். நகையாதீர். இது மனம் புனைந்த கூற்றன்று. நான் கூறுமிது உண்மை மொழியே. உங்கள் வீட்டுத் தோட்டத்திலும் அன்புடன் காத்து நீர்விட்டு வளர்க்கும் பூஞ்செடிகள்தாம் செழித்தோங்கி வளருகின்றன என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். அதை நம்பவும் விரும்புவீர்கள். ஆனால் உங்கள் கருணைநிறைந்த கண்பார்வை, மலரொன்றை நிறைந்த அழகுடையதாகச் செய்யுமானால், காற்றினால் உதிராது, வெப்பத்தால் வாடாது, பனியால் சுருளாது செய்யுமானால், ‘ தென்றலே மெல்லவந்து பூங்காவிடைப் புகுந்து கவரியெனச் செடிகளை அசையச் செய்வாய்’ என்று பனிவீழ்காலத்தில் நீங்கள் செவ்விதழ் திறந்து அழைக்கக் காற்றும் வருமென்றால், அதனை மாயவித்தை என்று சொல்லுவார். இவ்வாறு செய்யும் வன்மை பெறுதல் அரியதே. இதனிலும் அரியதும் பெரியதுமானஒன்று நீங்கள் செய்யலாம். சிருஷ்டியில் சிறந்த ஒரு மலரை, இன்னும் சிறப்புறச்செய்யவல்லீர். அம்மலரும் உங்களைப் போன்ற இந்திரிய அறிவைப் பெற்றது. அன்புக்கு அன்பு தரும் அம்மலர். அதைப் பரிவுடன் காத்துப் பரிமளிக்கச் செய்தால் அதுவும் உங்களைக் காத்து, உங்கள் வாழ்வை உயர்த்தும். எங்கும் இன்பமும் அமைதியும் வெள்ளமாய் ஓடும். பின்னர் உங்கள் வீட்டுத் தோட்டமின்றி

மலையிலும் காட்டிலும் எங்கும் நோக்குமிடந்தோறும் மலரும் செடியுமா யமையுமன்றோ!

அரசிகளே, நீங்கள் உங்களதாகிய வன்மையைப் பெற்று முறைவழி வினைசெய்வீரேல், உலகு எல்லாம் இயற்கை விதி அமைந்து பொலியும். எங்கும் தெய்வ மணங் கமழும்.

# "Politics" By Emerson.

# முன்னுரை.

1803-ஆம் வருஷம் அமெரிக்காவின் கண்ணுள்ள பாஸ்டன் (Boston) என்னும் நகரில் பிறந்து 1882-ஆம் வருஷத்தில் இறந்தார் பேரறிவாளர் எமர்ஸன் (Ralf Waldo Emerson.) தத்துவஅறிவில் ஸ்காட்லாந்துவாசியான தாமஸ் கார்லைல் என்பவரை ஒத்தவர். இருவருக்கும் உள்ள வேறுபாடும் சொல்லும் வகையிற்றான். பிரம்பின் துணை கொண்ட உபாத்தியாயராவார் கார்லைல். எமர்ஸனோ நண்பன்போல் தோள்தழுவிப் பேசுவார். அரசியல் செல்வாக்கென்றும் ஆசாரத் திருத்த மென்றும் வாய் வீசித் தோள்கொட்டிச் செய்யு முழக்கமெலாம் அவலமேயென்றும், மாந்தர்உய்யும்வழி அது அல்லவென்றும் நாம் மொழி பெயர்த்துள்ள 'அரசியல்' என்னும் கட்டுரையில் நயமொழிகளால் நுணுக்கமாய் ஆசிரியர் கூறிவைக்கிறார். விரிந்த நோக்கும், தத்துவ ஞானமும் படைத்த இப்பெரியார் கூற்றின் வாய்மையைக் கருத்தூன்றிப் பலமுறை படிப்போரே அறிதல் இயலும்.

# இராஜ்ய தந்திரம்.

இராஜ்ய விஷயங்களை நாம் கையாளும் காலத்தில், அதனது அரசியல் தனுதாயம் ஆசாரம் போன்ற முறைகள் அநாதிகாலமாய் இருந்து வருவதாக எண்ணிக் கொள்ளக் கூடாது. நீயும் நானும் பிறப்பதற்கு முன்னேயே அந்த முறைகள் நடை முதலில் வந்திருக்கலாம். அதனாலேயே அவை பூர்வ காலத்தில் இருந்தவை என்று எண்ணுதல் பிழை. இதுவன்றி, இராஜ்யத்தில் வாழும் குடிகளைக் காட்டிலும் இராஜ்ய முறைகள் உயர்ந்தனவல்ல என்பதும், எப்பொழுதாவது தனி விவகாரம் ஒன்றைத் தீர்ப்பதற்கு ஒருவன் செய்த சூழ்ச்சியே பிறகு பொதுச் சட்டங்களும் வழக்கங்களும் ஆய்விடுகின்றன என்பதையும், பண்டைநாள் தொடங்கி வருகின்றன என்று நாம் நினைக்கின்ற அந்த முறைகளுக்கு இணையாக நாமும் இப்பொழுது புதிய முறைகளை ஏற்படுத்தவும், அல்லாக்கால் அவைகளை மாற்றவும் கூடும் என்பதும், இருக்கும் முறைக்கு நிகராக மாத்திரமல்லாது அவைகளைவிட மேன்மையான முறைகளை நாம் அமைத்துக் கொள்வதும் இயலும் என்பதும், ஆகிய இந்தவித நினைவுகள் ஒருபோதும் நம் மனதைவிட்டு அகலாமல் இருக்க வேண்டும். வயது முதிரா வாலிபர்களுக்குப் பொதுஜன வாழ்க்கை ஒரு பெரும் மாயம். நடுநிலையாகச் சில முறைகளும் பேர்களும் மனிதர்களும் வழக்கங்களும் ஜன சமூகத்தில் (Society) ஆலமரம்போல் வேர் ஊன்றிச் சலிக்

காமல் அமர்கின்றனவென்றும், இவைகளைச் சுற்றித்தான் பிறவெல்லாம் வந்து இயன்றவாறு அவ்வப்போது பொருந்துகின்றன வென்றும் அவ்விளையோர் எண்ணு கின்றனர். ஆனால் இராஜ்யதந்திர அனுபவத்தில் முதிர்ந் தவர்க்குச் ஜனசமூகம், வெள்ளமும் காற்றும் போல் நிலையற்றது என்பது தெரியும். மூலஸ்தானமும் ஆணிவேரும் அரசியல் தந்திரத்தில் இல்லை என்பதை நம்முதியோர் உணர்வர். மேடு மடுவாகும், மடுவும் மேடா கும். இன்றைக்குத் தூசியாய்ப் பறந்தது நாளைக்கு மலையாய் நிற்கும். மலையாய் நின்றதும் ஒரு காலத்தில் தூசியாய்ப் பறக்கும். ஒவ்வொருவர் ஒவ்வொரு சமயம் தோன்றி ஜனசமூகத்தின் நடுவே மலையாக வளர்ந்து மற்றதெல்லாம் தம்மையே சுற்றி வரும்படி செய்து விடுகின்றனர். *வல்லமையால் இந்தவிதம் செய்யும் அவர் வாழ்வு சில காலம். வாய்மையால் உலகத்தைத் தம்பால் வசியம் செய்துகொண்டவர் வாழ்வோ அவ்வுலகு உள்ள ளவும் நிலைநிற்கின்றது.

ஆனால்,இராஜ்ய தந்திரம் அதற்கு வேண்டிய அஸ்தி வாரத்தின்மேலேயே நிற்கின்றது. அதை இலேசாகப்

---

குறிப்பு:—இந்தச் சந்தர்ப்பத்தில் எமர்ஸன், வல்லமையால் உலகத்தை வயப்படுத்திச் சிலகாலம் இருந்தவர்க்குக் கிராம் வெல்(Cromwell)என்பவரை ஆங்கில சரித்திரத்திலிருந்தும், வாய்மையால் எந்நாளும் உலகிற்கோர் ஆதாரமாய் அமைந்த வர்க்குப் பிளேடோ (Plato) என்பவரைக் கிரேக்கர் நாட்டி லிருந்தும், எடுத்து உதாரணமாய்க் காட்டுகின்றார். இவர் களுக்கு நிகராக நம் நாட்டில் முறையே சந்திரகுப்த அரசனை யும் கௌதம புத்தரையும் நினைவிற் கொள்ளலாம்.

பாராட்ட முடியாது. ஆள்வதற்கு அரசன் என்ற ஒருவன் இல்லாது ஜனங்கள் தங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்து இராஜ்ய காரியங்களை நடத்திக்கொள்ளும் நாடுகளில் (அமெரிக்கா போன்ற ரிபப்ளிக்குக்கள்), கொண்ட கொள்கைகளையும், வாழ்கின்ற வழியையும், ஜனங்களின் தொழில்களையும், வர்த்தகம் கல்வி மதம் போன்ற விஷயங்களையும், ஓட்டு எடுத்து (Votes) வெகு எளிதில் ஆக்குவதும் அழிப்பதும் கூடுமென்றும்; பத்துப் பேரைக் கூட்டிவைத்து ஓட்டுப்போடச் செய்து விட்டால் எந்த அசட்டுத் திட்டத்தையும் சட்டமாக நிறைவேற்றி ஜனங்கள் தலையிலே சுமத்தி விடலாமென்றும், வீணாக எண்ணி விவகரிக்கும் பாலிய உத்தியோக அதிகாரிகள் பலர் நிறைந்திருப்பர். ஆனால் அறிவு முதிர்ந்தவரோ அவ்வாறு மதியார். மணலை எடுத்துக் கயிறுக்க முயன்றால் அது திரிக்கும்போதே உதிர்ந்து விடுவதுபோல், அசட்டுச் சட்டங்கள் அழிந்துவிடும் என்பது இவர்களுக்குத் தெரியும். தேக பலத்தால் ஒரு பதவியை அபகரித்துக்கொண்டவனை வெகு சீக்கிரம் தொலைத்துவிடலாம். மனதின் எண்ணத்தினது ஆழத்தால் செய்கின்றவர்களே என்றைக்கும் அழியாதபடி செய்து வைக்கின்றனர். எந்தஎந்தக் காலத்தில் எந்தஎந்த ஜனங்கள் எந்தஎந்த விதமான அரசாட்சிக்கு உடன்படுகின்றார்களோ, அந்தஅந்த முறை அந்தஅந்தக் காலத்தில் அவ்வச்சனங்கள் அடைந்திருக்கின்ற மனத் தேர்ச்சியையே பொருந்தியிருந்து அத்தேர்ச்சியின் தன்மையைக் காட்டிவைக்கும் அறிகுறியேயாகும். இருக்கின்ற விஷயங்களை ஞாபகக்

குறிப்பாகச் சட்டங்கள் குறித்துவைக்குமே யல்லாது அவை தாமே விஷயங்களின் போக்கை ஆக்கவும் மாற்றவும் முடியாது. ஆதலால் குடிகளின் குணத்தையும் மனவளர்ச்சியையும் பின்பற்றியே அரசியல் தொடர்ந்து வருவதே இயற்கையாகும். குடிகளின் குணவளர்ச்சிகளைச் சட்டசபை கட்டி இழுத்துக்கொண்டு முன்போவதென்பது இயலாத காரியம். தேசச் சட்ட நிர்மாணங்களை நாம் அதிகமாய் மதிக்கின்றோம். இது மூடபக்தியே—தேசத்தவர்களுக்கு இருக்கின்ற குணத்தி னளவன்றி அச்சட்டங்களுக்குச் சக்தி அதிக அளவு ஏற்படாது. சட்டங்களின் ஜீவனெல்லாம் மனிதர்தம் மனத் தேர்ச்சியேயாம். "நேற்று நாம் இது இது சரியென்று சம்மதித்தோம், ஆனால் இந்த விதியைப்பற்றி இன்றைக்கு என்ன தோன்றுகின்றது உனக்கு!" என்று கேட்டவண்ணமாயல்லவோ தேசச்சட்டங்கள் எந்நாளும் நிற்கின்றன. பார்க்கப்போனல் சட்டங்க ளெல்லாம் நாணயங்கள் போன்றவை. அதனில் நமது உருவத்தையே முத்திரை குத்தி அனுப்புகின்றோம்: சிறிதுகாலத்திற்குள் அடையாளம் தெரியாமற் தேய்ந்து தேய்ந்து போய்விட்டுக் கடைசியில் ஒருநாள் நாணயச் சாலைக்கே (mint) திரும்பி வந்து சேர்கின்றது. இந்தப் பிரகிருதி (Nature), பொதுஜனப் பிரதானமன்று (Democracy). சட்டசபைகளுக்கு அடங்கிய ஆட்சியுமன்று (Limited Monarchy) அது சுயேச்சாதிகாரமே (Despotic) செலுத்தும். வாய்த்துடுக்கு மிகப்பெற்ற மக்களாலும் தன் அதிகாரத்தில் ஒரு துளி கூட வஞ்சித்துக் குறைக்க இடம் தராது. மாந்தரது மனம் அகன்று பகுத்தறிவு

புகப்புக முன்னிருந்த சட்ட நிர்மாணங்கள் பிதற்றிப் பிதற்றிப் பேசுகின்ற மிருகங்களாகத் தோன்றிக் கொண்டே வரும். ஆதலால், "சட்டம் சொல்வது இன்னதென்று தெரியவில்லையே, அதைத் தெளிவாகப் பேசும்படி செய்துவைக்க வேண்டு"மென்று அடிக்கடி முயன்று பார்ப்பர். இதற்கிடையில், பொதுஜன மனமானது தேர்ச்சியடைந்துகொண்டே வளர்கின்றது. பொய்யில்லா மெய்யர்தம் மனோரதங்கள், பின்னாள் நிறைவேறும் தீர்க்க தரிசனங்களும் ஆகிவிடுகின்றன. கலைவளரும் உள்ளத்து இளையவர், "இன்னபடி உலகம் இருந்தால் ஆகாதோ!" என்று என்று இன்றைக்குக் காண்கின்ற கனவுகளும், வேண்டுகின்ற பிரார்த்தனையும், எழுதுகின்ற சித்திரமும் ஒருநாளும் வீணாகப் போவதில்லை. வெளியிற் சொன்னால் 'இவை காரிய சாத்தியமல்ல' வென்று பிறர் சிரிப்பரே என்னும் நாணத்தால் அவர் வாய்திறக்க மாட்டாரேனும், அந்தக் கனவும் பிரார்த்தனையும் படங்களுமே

---

குறிப்பு:—அரசியல் முறைகளையும் ஆசார விவகாரச் சட்டங்களையும் சீர்திருத்த முயல்வதால் ஜனங்களுக்கு யாதும் பயன்படாதென்பது எமர்ஸனின் கொள்கை. அது குதிரைக்கு முன்னே வண்டியைக் கட்டி ஓட்டுவதற்கு நிகராகும். இன்னபடி குடிவாழ்க்கை இருக்க வேண்டும் என்னும் அவா முதலில் ஜனங்களது மனதில் பிறந்து வளரவேண்டும். இந்த அவா உயர்ந்ததா யிருப்பதற்கு அவர் மனத் தேர்ச்சியும் மனோபாவமும் அடைந்துள்ள உயர்ச்சியே அளவாகும். ஜனங்களுக்கு நல்லுணர்ச்சி வளர்ந்துகொண்டு வரவரச் சட்டங்களும் தாமே திருந்திக்கொண்டு வருமேயல்லாது, சட்டத்திருத்த மென்றும் அரசியல் முறையென்றும் நாம் வலிந்து மாற்றி வைப்பதால் ஜனங்களுக்கு நலமொன்றும் பயப்பதில்லை. நல்லுணர்ச்சி விளைவதற்குக் கலைகளோடு பயில்வதே மார்க்கமென எமர்ஸன் குறிப்பதையும் மறத்தலாகாது.

நாளைக்குப் பொதுஜன சங்கங்களின் தீர்மானங்களாகத் தோன்றிப்பிறகு "எங்கள் குறை இது" வென்றுஎல்லாரும் போராடக் கடைசியில் சட்டம் எனும் வெற்றிகொண்டு, வேறுவேறு கனவிற்கும் படத்திற்கும் இடம் கொடுக்கும் வரையில், நிலைபெற்று ஒருநூறு ஆண்டளவு நிற்கின்றதாகின்றன. தேசத்தின் சரித்திரமானது, ஆதலால், மாந்தர்தம் மனத்தேர்ச்சியின் நுண்மையையும் அதனுலெழும் பிரார்த்தனையையும் சிறிது தூரம் பின்னுகவே தொடர்ந்து வருமே யல்லாது முற்பாடது.

மனிதர்களுடைய மனதில் இராஜ்ய தந்திரத்தைப் பற்றிக் குடிகொண்டிருக்கின்ற கொள்கைகள்தாம் சட்டங்களாயும், அரசாங்கத்திற்கு எதிராகச் செய்கின்ற போராட்டங்களாயும் வெளியே தோன்றுகின்றன. இக் கொள்கை யாதெனில், சரீரம் சொத்து ஆகிய இவ்விரண்டு விஷயங்களைக் காப்பதற்காகவேதான் அரசாட்சி அமைந்திருக்கின்றது என்பதாகும். சரீரம் வரையில் எல்லாரும் ஓரேமாதிரியா யிருப்பதால் மாந்தரனைவரும் சம உரிமை உடையவர்கள். ஆதலால், சரீர உரிமையை நினைத்தபோது யாவரும் பொதுஜன சமஆட்சி (Democracy) வேண்டுவர். ஆனல் சொத்து சம்பந்தமாக மனிதர்களுக்குள்ள உரிமையோ ஏற்றம் தாழ்வு உடையது. ஒருவனுக்கு இடுப்பில் கட்டிய துணிதவிர வேறு ஆஸ்தி இருக்காது; இன்னொருவனுக்கோ ஜில்லா முழுவதும் சொந்தமாக இருக்கலாம். இந்த வித்தியாசம் அவனவனுக்கு அமைந்த சம்பாத்திய சாமர்த்தியத்தையும், சில சமயங்களில் பிதுரார்ஜிதத்தின் அளவையும் பொருந்தியதாய் இருக்கின்றது. எந்தக் காரணத்தால் இந்த ஏற்றம்

3473

தாழ்வு ஏற்பட்டபோதிலும், சொத்தின் அளவிற்குத் தகுந்தபடி சிலர்க்கு நாட்டில் உரிமை அதிகமாகவும் சிலருக்குக் குறைவாகவும் இருக்க நேர்கின்றது. ஆளுரிமை அனைவர்க்கும் சமம்; ஆதலால் இதை மாத்திரம் கருதினால் அரசாங்கம் அமையவேண்டியது ஜனத்தொகையைப் பொருந்தியதா யிருக்கும். ஆஸ்தியைக் கருதி அரசியல் அமைய வேண்டுமானால் அது முதலாளிகளையும் அவர்களது ஆஸ்தியையும் பொருந்தியிருக்க வேண்டுமென்பது அவசியம். முதலாளியாக இருக்கின்ற ஒருவன் தன் சொத்தைப் பிறர் அபகரித்துக்கொண்டு போகாமல் காப்பதற்குத் தகுந்த உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்வதற்காக வரி செலுத்தி வருகின்றான். பொருள் இல்லாதவனுக்கு அது போய்விடுமோ என்னும் பயமும் இல்லையாகையால் அவன் வரி யொன்றும் செலுத்துவது இல்லை. ஆனால் பொருள் இருக்கின்றவனாகட்டும் இல்லாதவனாகட்டும் இரண்டுபேருக்கும் சரீரம் உண்டு. அந்தச் சரீரத்திற்குக் கஷ்டங்கள் வராமல் காப்பதற்குத் தகுந்த உத்தியோக ஏற்பாடுகள் செய்ய இவ்விருவருக்கும் இருக்கின்ற உரிமை சமம். ஆனால் ஆஸ்தியைப் பாதுகாக்கும் உத்தியோகஸ்தரைத் தேர்ந்தெடுக்கவேண்டியவன் நியாயமாய் முதலாளியாகத்தானே இருக்க வேண்டும். ஆதலால் பொருளைக் காப்பதற்குக் காவல் முதலிய உத்தியோகங்களை அதிகமாய் ஏற்படுத்த வேண்டுமென்றால், தம் தம் பொருளின் ஒரு பாகத்தை வரியாகச் செலுத்தி அக்காவல் விஷயத்தைத் தகுந்தபடி தீர்மானம் செய்யத் தகுந்தவர்கள் தனவந்தர்களே. இருக்கக் கூரையு மில்லாது ஊரூராய்த் திரிந்தும் இட்டசோற்றைத் தின்று

வளர்பவர், பொருள் சம்பந்தமான சட்ட திட்டங்கள் செய்வதற்கு அவ்வளவு தகுந்தவர் அல்லர்.

ஆதிகாலத்தில் பணக்காரர்களெல்லாம் தங்கள் செல்வத்தைத் தாங்களே மெய்வருந்திச் சம்பாதித்துக் கொண்டவர்களா யிருந்தார்கள். இந்தவிதம் அவரவர் ஆஸ்தி அவரவர்க்கு நேராக வருவதாயிருந்தால், பொருள் சம்பந்தமாகப் பொருள் உடையவர்களும் சரீர சம்பந்தமாக மனிதராயிருக்கின்ற யாவரும், தத்தமக்குத் தக்கபடி சட்ட நிர்மாணங்கள் செய்துகொள்ள வேண்டுமென்பது அல்லாது, வேறு எவ்வித அபிப்பிராயமும் பொது ஜன வாழ்க்கையில் ஏற்படுவதற்கு நியாயமில்லை.

எனினும்; இந்த விதமாகச் சரீர உரிமையென்றும் சொத்து உரிமையென்றும் வேறுவேறாய் எல்லா விஷயங்களிலும் பிரித்து விவகரிக்க முடிகின்றதில்லை; அவையிரண்டும் ஒன்றோடொன்று கலந்து விடுகின்றன. ஆதலால், சொத்துக்குச் சொத்துடையவர்களும், சரீரம் வரையில் யாவரும் நிர்வாகம் செய்து கொள்வதே தகுதி என்னும் அக் கொள்கை எல்லோராலும் எளிதில் ஏற்றுக்கொள்ளக் கூடியதா யிருந்தாலும், அதன்படி அனுசரித்து வருவது கஷ்டமாயிற்று. கடைசியில், சரீரப் பாதுகாப்பு வரையிலும் நிர்வாக உரிமை யாவருக்கும் சமமாயிருந்த போதிலும் செல்வம் உடையவர்களுக்கே இந்த விஷயத்திலுங்கூடச் செல்வாக்கு அதிகமாகிச் சட்ட நிர்வாக சபைகளில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் உரிமை மிகுந்ததாய்க் காணப்பட்டது. சமத்வமாயிருப்பதுவே நியாயம் என்ற தன்மை அகன்று நியாயமாயிருப்பதெல்லாம் சமந்தான் என்று ஆயிற்று.

ஏது முறையோ அதுவே சமம், என்னும் இந்தக் கொள்கை முற்காலத்தில் சந்தேகத்திற்கு ஆஸ்தபமா யிருந்ததில்லை, ஆனால் இக்காலத்தில் இது நீதியோ எனும் சங்கை பிறக்கத் தலைப்படுகின்றது. இந்தச் சங்கை ஏற்படுவதற்குக் காரணம் இரண்டு இருக்கின்றன. பொருள் ஆதாயச் சம்பந்தமாகச் செய்திருக்கின்ற சட்டங்களுக்கு அளவு கடந்த முக்கியஸ்தானம் கொடுத்துப் பழக்க வழக்கங்களால் கட்டி வைத்திருப்பதால், ஏழைகளின் உரிமைகளைக் கவர்ந்து அவர்களை ஏழைகளாகவே தனவந்தர் அடக்கி வைக்க நேர்கின்றதோ எனும் அபிப்பிராயம் சிலர் மனதில் தோன்றி இருப்பது ஒன்று. மற்றது இதினிலும் முக்கியமானது. அது யாதெனில், ஆஸ்தியைப் பிரதானமாக நினைத்துச் செய்கின்ற நிர்மாணங்களெல்லாம் மனித வாழ்க்கையைப் பாழாக்கித் தாழ்மைப்படுத்தும் தன்மையனவென்றும்; வாஸ்தவத்தில் அரசாங்கத்தார் கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டியது மாந்தர்களைப் பற்றியேதான் என்றும்; மனிதர் முன்னேற்றம் அடைந்தால், பொருளும் தானாகவே முன்னேற்றம் அடையும் என்றும்; மனிதர்களுடைய மனதைப் பண்படுத்தி வளர்ப்பதே அரசாட்சியின் பிரதான நோக்கமா யிருக்கவேண்டு மென்றும்; மக்களுக்கெல்லாம் கல்விப் பயிற்சி ஏற்படுமாயின் மற்றச் சட்ட விதிகளும் தனுதாய முறைகளும் செம்மையடையும் என்றும்; அப்பொழுதே, தருமசிந்தனையே தேசச் சட்டங்களை எழுதிவைப்பன ஆகும் என்றும், சரிவரச் சொல்வதற்கு அரியதேனும் சுயமா யுணரவல்ல வோர் உள்ளுணர்ச்சி பற்பலர் எண்ணத்தில் எழுந்து ஆங்காங்குத் தோன்றுகின்ற தோற்றமே யாகும்.

பொருள் படைத்த பேர்களே பொருளைப்பற்றிய சட்டங்களை நிர்மாணம் செய்ய உரிமையுடையவர்களோ, மற்றவர் செய்தால் சரிவர அது சமமாய் அமையாதோ என்னும் இக்கேள்வியின் நியாயம் எதுவென்று தீர்மானம் செய்வது சுலபமல்லாமற் போனாலும், நமக்கு இயற்கையிலேயே காப்பாக அமைந்த விஷயங்களை நினைத்துக்கொள்வது நல்லது. சட்டமும் அதைச் செலுத்தும் அதிகாரிகளும் நம்மைக் காப்பதைவிட மிக நன்றாய்க் காக்கின்றவை வேறு சில இருக்கின்றன. இல்லாமற் போனால் நாடெல்லாம் ஒரு நொடியில் பாழாகி விடுமே. ஏனெனில், எந்த நாட்டிலும் ஜனங்களில் பெரும்பகுதி வயதிற் சிறியவரும் மடயர்களுமாகவே எப்பொழுதுமிருப்பர். வயதொடு அனுபவமும் முதிர்ந்தவர்களுக்கே நியாயஸ்தலங்களும் (Courts), இராஜ்ய தந்திரிகளும் (Statesmen) வெறும் பொய்யானவொரு கபட வேஷம் என்பது வெட்டவெளி யாகின்றது. ஆனால் அவர் இறந்துவிடுகின்றனர். இறந்த அத்தந்தையர் சேகரித்த அனுபவ அறிவைப் பிள்ளைகள் பிதிரார்ஜிதமாகப் பெற்றுக்கொள்வதில்லை. இப்பிள்ளைகளோ, தகப்பன்மார் தம் வயதில் இருந்தபோது எண்ணியது போலவே, தாங்கள் படிக்கும் வர்த்தமானப் பத்திரிகைகள் (Newspaper) சொல்வதே மெய்யென்று நம்புகின்றனர். இப்படி அசடர்களாயும் மோசம்போகக் கூடியவர்களாயும் இருக்கின்ற ஜனத்தொகையின் பெரும்பகுதியை (majority) வைத்துக்கொண்டு தேசங்கள் பாழாகாமல் என்ன செய்யும். ஆனால் தெய்வச் செயலாய், இவர்களது மடத்தனத்தையுங்கூட ஒரு எல்லைக்குள் கட்டி

வைக்கக் காவல் ஒன்று உளது. ஆள்பவர்களது அசட்டுத்தனமும் பேராசையுங்கூட அதைக் கடந்து போக முடியாது. அந்தக் காவல் என்னவென்றால், இயற்கை விதிகள்தாம். மனிதனுக்கு இருப்பதுபோலவே வஸ்துக்களுக்கும் ஏற்ற விதிகள் உண்டு. தம்மைக் கண்டபடி ஆட்டிவைக்க வஸ்துக்கள் இடம் கொடுப்பதில்லை. விதைத்து எரு இட்டாலல்லாமல் தானியம் விளையுமோ? அறுத்துத் தாம் அனுபவிப்பார் என்ற நிச்சயம் இல்லாமற்போனால் மனிதரும் பயிர்த்தொழில் செய்யமாட்டார். எந்த ஏற்பாட்டிலேனும் சரி, மனிதரும் சொத்தும் தத்தமக்குரிய அதிகாரத்தைச் செலுத்திக்கொள்வதே நேரும். ஒரு வீசை மண்ணை யெடுத்து எவ்வளவுதான் சாமர்த்தியமாய் மூடிவைத்தாலும், ரோயுருக்கினாலும் காற்றாய் மாற்றினாலும், என்ன செய்தாலும் சரி, அந்த ஒரு வீசை மண்ணிற்கு இருக்கின்ற பாரம் இருந்துதானே தீரும். மனிதரும் அப்படியே. ஒருவனுக்கு இருக்கின்ற புத்தியும் குணமும் அவைகளுக்குரிய சக்தியை எந்தச் சட்டத்தின்கீழும் எப்படிப்பட்ட கொடுமையின்கீழும் காட்டியே தீரும். வெளிப்படையாகக் காட்டமுடியாத சந்தர்ப்பத்தில் இரகசியமாகக் காட்டுவான். சட்டத்தின் சார்பாக அல்லாமற்போனால் அதற்கு விரோதமாகவும், மருந்தாக முடியாதவிடத்தில் விஷமாகவும், நியாயமாகவோ அல்லது பலத்தையே ஆதாரமாகக்கொண்டோ, அவனுக்கு இயற்கையாய குணங்களும் புத்தியும் ஊக்கமும் வெளிவந்து தம் சக்தியைக் காட்டாமற் போகா.

இந்தவிதம் காட்டக்கூடிய சக்தி ஒவ்வொருவனுக்கும் எவ்வளவு இருக்கின்றது என்று எல்லையிட முடி

யாது. ஏனெனில், புத்தியும் ஊக்கமும் ஒருபுறமிருக்க, மனிதர் பாபபுண்ய எண்ணங்களுக்கும் தெய்வத்தின் வல்லமைக்கும் கருவிகளா யிருக்கின்றனர். தேச சுதந்தரம் மதப்பற்றுப் போன்ற நோக்கங்கள் பொதுஜனங்களின் கருத்திற்குள் புகுந்து ஆளத்தொடங்கிவிட்டால் அப்புறம் அவர்கள் செய்யவல்லது எவ்வளவு என்பது கணக்கிற்கு அடங்காது. ஒரு தேசத்து ஜனங்கள்எல்லோரும் மனம் பொருந்தித் தம் சுதந்தரத்தை அடைவதென்றோ, அல்லது பிறர் நாட்டை வெல்வதென்றோ நினைத்து முயல்வார்களானால், ஜனத்தொகைக் கணக்கையெல்லாம் குழப்பிவிட்டு, இருக்கின்ற சாதனங்கள் சிறிதானாலும் செய்கின்ற காரியங்கள் பெரியனவாய்ச் செய்து முடித்து விடுவார்கள். கிரேக்கர் ஸாரஸன் ஸ்விஸ் அமெரிக்கர் பிரஞ்சுகாரர் முதலிய சாதியார் செய்த காரியங்கள் இப்படிப்பட்டவை.

இந்தவிதம் கணக்கிற்கு அடங்காமல் ஒவ்வொரு சமயம் தம்சக்தியை மனிதர் செலுத்தக் கூடியவர்களா யிருக்கின்றனர். ஆனால் பொருள்களுக்கோ ஒவ்வொரு அணுவிற்கும் அமைந்த சக்தியை அதனளவே செலுத்துகின்ற தன்மை மாறாது நடக்கும் திறமை ஒன்றே யுண்டு. ஒரு அணா என்றால் அது, தானியமோ மற்றெந்த வஸ்துவோ அதற்கீடான ஒன்றிற்குப் பதிலாய்க் கருதப்படுகின்றது. மனிதனுக்கு ஏற்படும் அவசியங்களினால் அந்த அணாவிற்கு ஒரு மதிப்பு ஏற்படுகின்றது. ஒரு அணா இருந்தால், இத்தனை அரிசி, இத்தனை கட்டை அல்லது இத்தனை வெளிச்சம் என்ற திட்டம் சொல்லலாம். செல்வ வந்தர்களைப் பற்றிச் சட்டங்கள் என்ன

வேணுமானாலும் செய்துகொள்ளட்டும், அந்த ஒரு அணுவிற்கு இருக்கின்ற சக்திமாத்திரம் அதை விட்டு அகலாது. பித்தேறிய ஒருபோது, சட்டமானது சொத்துடையவர்களுக்கு எவ்வித அதிகாரமும் இருக்கப்படாது என்று சொல்லிவிட நேரலாம். அவர்களுக்கு வோட்டுக் கொடுக்கிற உரிமைகூட இல்லாமற் போகட்டுமே. இருந்தாலு மென்ன. இந்தச் சட்டத்திற்கும் மேலான ஒரு விதியினுல் வருஷா வருஷம், ஆஸ்தியுள்ளவர்களே ஆஸ்தி சம்பந்தமான சட்ட நிர்மாணங்கள் செய்துகொண்டு வருகின்றவர்க ளாவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. சொத்து இல்லாதவர் அப்பொழுதும், சொத்துடையவர் சொற்படி சட்டங்கள் எழுதுகின்றவர்களாகவே ஆவார்கள். சொத்துடையவர்கள் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றவைகளை, சொத்தினது முழு பலங்கொண்டு சட்டத்தின் மூலமாகவோ, அல்லது சட்டத்திற்கு மாருகவோ செய்து கொள்ளலாம். இங்கு நான் சொத்து என்று சொல்லும்போது தனித் தனியாகச் சிலருக்கு இருக்கின்ற பெரிய ஆஸ்தியை நினைக்கவில்லை. மொத்தத்தில் அந்நாட்டிலிருக்கின்ற சொத்துக்களை யெல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து நினைத்தே பேசுகின்றேன். பணக்காரன் தேர்தலில் தோல்வியடைய நாம் பலமுறை காணலாம். அப்பொழுதுகூடக் கைப்பணம் தன் சக்தியை யிழந்து தோல்வியுற்றதே என்று எண்ண வேண்டா. ஏனெனில், அவனுக்கு விரோதமாக வோட்டுப் போட்டவர்கள் எல்லாரும் தனித்தனி ஏழைகளாயிருந்தாலும், இந்த ஏழைகளுக்குள்ள உடைமைகளை எல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து

மதிப்புப்போட்டால், தோற்றவன் சேர்த்துவைத்திருந்த ஆஸ்தியைவிட அதிகமாகவே யிருக்கும். உடைமை என்பது ஒன்று மில்லாதவன் இல்லை. மாடாவது ஒன்றிருக்கும். கலப்பையாவதிருக்கும். ஒன்றுமில்லாமற்போனால் அவனவன் கைகளேயாவது அவனுக்கு உடைமையான பொருளாகும்.

இந்தவிதம் எந்த ஒரு அவசியத்தினால் மனிதர்களுக்கும் பொருள்களுக்கும் உள்ள இயற்கை உரிமை, துஷ்டர்களாயும் மடயர்களாயுமிருந்து சட்டம் செலுத்துவோர்களால் விளையும் கொடுமையினின்று காப்பாற்றப் படுகின்றதோ, அதே அவசியம் அந்த அந்தத் தேசத்தைச்சேர்ந்த ஜனங்களுக்குத் தகுந்த அரசியல் முறையும், அதை நடத்தும் வகையும் எவையெனத் திட்டம்செய்து விடுகின்றது. ஒரு தேசத்திற்குப் பொருந்திய இம்முறையையும் வகையையும் இன்னொரு தேசத்திற்கு மாற்றிக் கொள்ள இயலாது. அரசன் சுயேச்சையாய் அதிகாரம் செலுத்துவது ஒருமுறை. அரசனானவன் மந்திரிகளின் சொற்கேட்டு அவர்களுக்கு இணங்கி ஆள்வது வேறு முறை. செல்வாக்குடைய சிலர் சேர்ந்து நாட்டினது அரசைநடத்திவைக்கும் முறையும்உண்டு. அல்லாமல் பொது ஜனப் பிரதானமாய் நாட்டினர் அனைவரும் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள நினைத்துப் பிரதிநிதிகளைத்தேர்ந்தெடுத்துச் செய்யவேண்டியதும்இதுவெனச் சொல்லித் தேச காரியங்களை அவர்களைக் கொண்டு செய்து வைத்துக் கொள்வதும் மற்றொருவித அரசியல்முறை. இவைகளுக்குள் எந்தமுறை நல்லது எந்தமுறை கெட்டது என்று ஏற்றந்தாழ்வு பார்க்கப் புகுவது சரியல்ல. எந்த

தேசத்தவர்களுக்கு எந்தமுறை பொருந்துமோ அந்த முறையே அவர்களுக்கு நல்லதென்று நினைக்கவேண்டும். இவைகளை அரசியல் கொள்கைகளாக மாத்திரம் வைத்துக்கொண்டு ஏற்றத்தாழ்வு பாராட்டி வாதாடுவது ஒரு புறமிருக்க, எந்தவித அரசு முறையை நடத்தி வைக்கும் போதும் பொதுவாக ஒன்றிற் கிருக்கின்ற குறைகளை மற்றவைகளிலும் காணவே காண்கின்றோம். அரசியல்கள் எல்லாம் கையாளும் தன்மையில் கெட்டுக் கிடக்கின்றன. நல்லவர், சட்டத்திற்கு முற்றிலும் கட்டுப்பட்டிருக்கக் கூடாது. இராஜ்ய தந்திரம் என்று அழைக்கப்படுகின்ற வசையொன்றே அரசாட்சிக்குப் போதாதா! தந்திரம், என்றாலே கபடம் என்பது அர்த்தம். அரசியல் எல்லாம் ஒரு பெரும் மோசம் என்று இதனால் குறிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு அரசியலிலும் இரண்டு கட்சிகள் இருக்கும். ஒரு கட்சியினர் அரசாங்கத்தாரை எதிர்ப்பவர், மற்றவர்சார்பு நின்று தாங்குபவர். அரசியல் நடக்கின்ற விஷயத்தில், அதை நடத்துகின்றவர்கள் துஷ்டர்களும் மூடர்களுமா யிருந்தாலும் மனிதர்களுக்கும் பொருள்களுக்கும் உள்ள உரிமையும் சக்தியும் கெடாமல், அசட்டுச் சட்டங்களுக்கும் மேலான ஒரு விதியினால் காக்கப் பெறுகின்றன வென்று முன்னிங்கு விளக்கிக் காட்டினேன். கட்சிகள் என்பவை அரசியலின் பாகங்கள். எல்லாக் கட்சியிலும் மூடர்களும் துஷ்டர்களுமிருப்பார்கள். முன் சொன்ன அதே விதிதான் மீண்டும் கட்சிகளால் வரும் கேட்டினின்று மக்களை ஒருவாறு காப்பாற்றி வைக்கின்றது. கட்சியின் தலைவர்

கள் கூறுகின்ற புத்திமதி ஒருபுறமிருக்க, அக்கட்சியைச் சேர்ந்தவர்களது இயற்கையறிவு வழிகாட்டி யாகின்றது. கட்சிகள் பிறக்கின்றபோது நேர்மைக்கு விரோதமான தொன்றும் அவைகளிடத்தில் இருக்காது. முரண் கொண்டு சில காரியங்களை அவை செய்யலாம். இருப் பினும் தோன்றுகின்ற கட்சிகளை நாம் வைவதென்றால் அது வாடைக் காற்றையும் கோடை வெயிலையும் வைகின் றது போலாகும். அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர் தாம் அடைந்த நிலைமைக்குத் தகுந்த உத்தரம் சொல்ல இய லாது. எப்படியோ அவர்களை வந்தடைந்த இலாபம் போய்விடாமல் காத்துக்கொள்கின்ற நிலையிலேயே அவர் நிற்கின்றனர். பெற்ற இலாபத்தைப் போற்றிக்கொள்வது என்பது இயற்கை தர்மம். இதைமட்டும் செய்கின்ற வரையில் எந்தக் கட்சியினரிடத்தும் குறை சொல்வதற் கில்லை. ஆனால் இந்த இயற்கை நிலையைவிட்டுத் தங்க ளது ஏற்பாட்டிற்கு ஒருவித சம்பந்தமும் இல்லாத விஷ யங்களுக்குள் சுயநயம் கருதியும், தலைவர்களென்பார்கள் இடுகின்ற ஏவலுக்குக் கீழ்ப்படிந்தும்,தலையிட்டுக் கொள் கின்றபோதுதான் நாம் அக் கட்சியைக் கண்டிக்க வேண்டி வருகின்றது. சேர்ந்திருக்கின்ற ஆள்கள்தாம் கட்சியைக் கெடுத்துக்கொண்டே வருகின்றனர். கட்சி யின் நோக்கம் வரையில் பார்க்கப்போனால் அயோக்யதை யொன்று மில்லாம லிருக்கலாம். அதைச் சேர்ந்த தலை வர்களைப்பற்றியோ இப்படிச் சொல்வதற் கில்லையே. தாங்கள் நடத்தி வைக்கின்ற பொதுஜனங்கள் சொன்ன படி கேட்டு அவர் காட்டும் ஊக்கத்தால் வருகின்ற பலனை எல்லாம் தலைவர்களே அனுபவித்துக் கொள்கிறார்கள்.

பொதுவாகக் கூறினல், சமயோசிதமாகக் கட்சிகள் சேர்கின்றனவே யல்லாது தர்மக் கொள்கைகளே ஆதாரமாக அவை பிறப்பதும் அரிது. விவசாயமும் வர்த்தகமும், முதலாளியும் தொழிலாளியும், எதிரெதிர் மாறுபட்டு நிற்பானேன். தர்ம பரிபாலனம் செய்வதென்ருல் இடமாறி இவைகளெல்லாம் எந்த ஏற்பாட்டையும் பொதுவாகப் பாராட்ட வேண்டாமா! தர்மக் கொள்கைகளைப் பற்றி எழுந்த கட்சிகளும் சில உள. மதவகுப்பு, வரிபோட்டுத் தடுக்காத வர்த்தகம்: வோட்டுரிமை அனைவர்க்கும் சமமாதல், சிரசாக்கினைச் சட்டத்தை நீக்கிவிடல் போன்ற கட்சிகள் அவைகளுக்கு உதாரணம். ஆனல் இவைகள் கூடக் கொள்கையின் உயரிய ஆதாரத்தால் நிற்காமல் வரவர 'அவன் சொன்ஞன் இவன் செய்தான்' என்று ஆள்களே முன்னிற்கும்படி தாழ்ந்துவிடுகின்றன. இப்படித் தாழ்ந்தவுடன் யாருக்கும் இதில் ஊக்கம் நிலை நிற்கின்றதில்லை. நம்நாட்டில் இப்பொழுது (அமெரிக்காவில் அறுபது வருஷங்களுக்குமுன்) முக்கியமா யிருக்கின்ற கட்சிகளுக்குள்ள தோஷம் என்னவென்ருல், அவையொன்றும் பிராணுதாரமான ஆழ்ந்த விஷயங்களொன்றிலும் வேரூன்ருமல், உலகத்திற்கு எந்நாளும் பயனற்றதாய், அந்த அந்த நிமிஷத்தில் கிளம்பி மறைகின்ற விஷயங்களைப் பற்றிக்கொண்டு தலைவிரித்து ஆடுவதே யாகும். இப்பொழுது இங்குத் தேசத்தை இரண்டுபட வைக்கும் கட்சிகளுள் ஒன்றின் கொள்கை சிறந்தது, மற்றதைச் சேர்ந்த ஆட்கள் சிறந்தவர். தத்துவ அறிவு உடையவரும் கலையுணர்வு உடையவரும் தெய்வ பக்தியுடையவரும் ஆகி இருப்பவர் எளியோரை வலியோர் நலி

யாதிருக்கும் பொருட்டுக் காப்பதற்கென்று அமைந்த கட்சியைச் சேர்வதற்கே முன்வருவர். ஆனால் இந்தச் சுதந்திரவாதக் கட்சியின் கொள்கையை நிறைவேற்றி வைக்கத்தகுந்த ஆள் 'இவன்' என்று ஒருவனைப் பொது ஜனங்கள் வோட்டுக் கொடுக்கக் காட்டும்போது, அவனையோ அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. பொதுஜன சுதந்தரத்தினால் பொதுஜனங்களுக்கு நன்மை உண்டாகவேண்டும் என்னும் நோக்கம் இப்பிரதிநிதிகளாய் நிற்பவர்களுக்கு இல்லை. அடியோடு யாவையும் மாற்றவேண்டும் என்னும் கட்சியோ (Radicals) இருப்பதை அழித்துவிட வேண்டுமென்பது தவிர வேறெதையும் குறிக்கொண்டிருக்கக் காண்பதரிது. அதற்கு அன்பு இல்லை. அந்தத்தில் எதை அடைவதென்ற திவ்யநோக்கம் ஒன்றும் அதற்கில்லை. பகையினாலும் சுயநய நசையினாலும் இருப்பதைப் பாழாக்குவதே அதன் காரியமாகின்றது. மிதவாதக் கட்சியை (Conservatives) பார்ப்போம். அதைச் சேர்ந்தவர்கள், நிதான புத்தி யுடையவர்களும் சாமர்த்தியசாலிகளும் மனத்தேர்ச்சியுற்றவர்களும் ஆகிப் பெரும்பான்மை அமைகின்றனர். இருந்தாலு மென்ன. நல்லதென்று நினைப்பதைச் செய்துமுடிக்க இவர்களுக்குத் தைரிய மில்லை. இருப்பது போகாமல் காத்துக் கொண்டாலே போது மென விவகரிக்கின்றனர். யாவர் சுய உரிமைக்கும் இக்கட்சி தன் தோளைக் கொடுப்பதில்லை. உண்மையாய நலமொன்றும் நாடுவதுமில்லை. கொடிய குற்றங்களைத்தான் கடிகின்றதா! பெருந்தன்மை வாய்ந்த ஆட்சி முறைகளை அனுசரிக்கின்றதா! மண்டபங்கள் கட்டுவிக்கின்றதா!

காவியங்கள்தான் எழுத வைக்கின்றதா! கலையுணர்வை வளர்க்கின்றதா! மதப்பற்றைப் போற்றுகின்றதா! பாடசாலைகள் ஸ்தாபிக்கின்றதா? சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்கின்றதா! அடிமைகளை விடுவித்து ஏழைகளுக்கு உரிய உறவுதான் கொண்டாடுகின்றதா! ஒன்றுமில்லையே. கட்சி எதுவா யிருந்தாலென்ன, அது அதிகாரத்திற்கு வந்தவுடன் நாட்டின் நலங்களைக் கொண்டு என்ன அநுகூலம் செய்து வைக்கின்றது! சாஸ்திர ஆராய்ச்சியிலும் கலைகளின் வளர்ச்சியிலும் தர்ம பரிபாலனத்திலும் பெறத்தக்க பயனொன்றும் உலகம் கட்சிகளின் மூலமாய் எதிர்பார்ப்பதற்கு இல்லை.

---

குறிப்பு:—இந்த இராஜ்யதந்திரம் என்னும் வியாசத்தால் மேனாட்டுப் புத்தரென்று போற்றப்படும் பேரறிஞர் எமர்ஸன், தர்மத்தில் தளராத் தனிமனம்பெற்ற மாந்தர் வாழ் நாட்டில் வாழ்க்கையெல்லாம் மெய்யாக, அவர் புரியும் கருமமெல்லாம் இன்பமாக முடியுமென வகுத்துக்காட்டுவதைச் சட்டத்தாலும் அரசாங்கத் திருத்தத்தாலும் நாடும் மக்களும் சீர்பெறவென்று முயன்றுவரும் சமூகவயித்தியர்களும், அரசியல் வாதிகளும் மற்றவரும், சற்றுக் கவனித்தல் நலம். ஆழ்ந்த அறிவுபெற்ற பெரியார் பலரும், இம்முடிவுக்கே வந்துள்ளார்கள். உயிர்ப்பொலிவற்ற சட்டங்களால் என்ன செய்ய இயலும். தூக்குமரங்களும்,சிறைக்கோட்டமும் மற்றச்சட்டங்களும்கொலையையும், களவையும், பூசலையையும் நிறுத்தியுள்ளதாகத் தேச சரிதம் கூறுமாயின், அதை அறிய விரும்புவோம். இல்லையெனில், மாண்டஸ்கோ, டாக்குவயில், எமர்ஸன், ரஸ்கின், கார்லைல், டால்ஸ்டாய் போன்ற பெரியார் கூறுமாறு, பிறருக்குத் தீதிலாவகை வாழ்ந்து கடவுளுக்கு வழிவிட்டு என்

இருக்கலாகாது? சட்டத்தால் தண்டிக்கவே இயலும். மாந்தரை உயர்த்தி வானிடை அழைத்துச்செல்லாது அது. அன்பையே அறியாச் சட்டம் வளர்ப்பது கொடுமையேயாகும் என்பதைச் சற்று ஆழ்ந்து கருதுவோர் ஏற்காதுபோகார். மாந்தர் வாழ்வு உயரின், வேண்டும் எல்லா நலங்களும் தாமாக வந்து முளைக்கும். பின்னர் அரசாங்கமும் ஆட்சியொன்றும் எதற்கு? ருஷியலெனின் ஒன்று சொல்லின், இத்தாலிய முஸலனி வேறு ஒன்றே சொல்லி நகைக்கவே நகைப்பான்.

# HAPPY

FROM CARLYLE'S "PAST AND PRESENT"

# முன்னுரை

ஆங்கிலப் பேரறிஞராகிய தாமஸ் கார்லைல் என்பவர் 1795-ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்தில் பிறந்து 1881-ம் ஆண்டு இறந்தார். அவர் "முற்காலமும் இக்காலமும்" என்று எழுதியுள்ள ஒரு சிறந்த நூலினின்று "சுகம்" எனும் தலைப்புடைய அத்தியாயத்தை எடுத்துத் தமிழில் மொழி பெயர்த்து இங்கு வரைந்துளோம். தனக்கும், தன் வீட்டிலும் பொதுத் தலங்களிலும் சீர்திருத்தச் சங்கங்களிலும் சட்ட சபைகளிலும், எல்லாரும் எங்கும் "சுகம் சுகம்" என்று ஏதோ வொன்றைச் சொல்லிக்கொண்டு முயற்சி பல செய்துவரும் இக்காலத்தில், தத்துவ அறிவில் முதிர்ச்சியுற்ற ஒரு பெரும் புலவர் நமக்கு எடுத்துக் காட்டும் உண்மை யாதெனப் பார்ப்பது நலம். தன்னையே நினைத்துத் தான் 'சுகம்' பெறுவதே வேலையென்று விவகரிப்பதெல்லாம் தனக்கேனும் பிறர்க்கேனும் சுகத்திற்கு ஆதாரமாகாவென்பதும், பெருந்தன்மை யொன்றேநினைவாகப் பிறர்க்குப் பயன்படும் வேலை யெதுவென்று தேடிச் செய்வதே வாழ்க்கையின் நோக்கமாயிருக்க வேண்டும் என்பதும் இச்சிறு கட்டுரையின் கருத்து. சுருங்கச் சொல்லும் வன்மைபெற்ற கார்லைல் தன் கருத்தை ஒன்றிரண்டு வார்த்தையால் உரைக்கின்றாராதலால், இது விளங்க வேண்டுமாயின் ஒரு முறைக்குப் பன்முறை யாவரும் ஆழ்ந்து படித்தல் அவசியம். ஆங்கிலத்திலேயே அவர் நடை சிறிது கடினமானது.

---

# சுகம்

எல்லாத் தொழில்களும், பருத்தி நூற்பது உள்பட, பெருமையானவை. தொழில் ஒன்றிற்கே பெருமையிருக்கின்றது. பலமுறை இவ்விஷயத்தை இதற்குமுன் கூறி யிருக்கலாம், ஆனாலும் பின்னுமோர் முறை இதைச் சொல்லி வற்புறுத்துவோம். கௌரவம் (அல்லது அந்தஸ்து) என்று சொல்லப்படுவதும் துன்பமானவை. சுகமான வாழ்க்கை என்பது மனிதன் என்ற எவனுக்கும் இல்லை. தேவர்களுக்குத்தான் உண்டோவென்றால் அவர்களுக்கு மில்லையே. தேவர்களுடைய வாழ்க்கை எப்படியிருக்கும் என்று சிந்தித்தால், அது, ஓயாத வேலையோடு ஓயாது போர்செய்யும் ஒரு தெய்வத் துயரமாய் இருக்குமென்றே நம் மனதிற்குத் தோன்றுகின்றது. நமது உயர்ந்த மதத்திற்கும் (கிறிஸ்தவமதம்) 'துக்கத் தொழுகை' (Worship of Sorrow) என்று பெயரிட் டிருக்கின்றார்கள். ஏனெனில், மானுடமகனுக்கு (Son of man, the Jesus Christ) முள்முடியன்றிப் பெருமை வாய்ந்த மகுட மொன்றும் பொருந்தவில்லையே! இந்த விஷயங்கள் எல்லாரும் சொல்லவும் எல்லாரும் உள்ளத்து உணரவும் முற்காலத்தில் நன்கறிந்தனவா யிருந்தன.

அவலமே ஆகவாக இம்மனிதன் விவகரிக்கும் வழியெல்லாம் வாழ்க்கையின் தத்துவத்தைப்பற்றி அவன் கொண்டிருக்கும் ஓரே ஆபாசக் கொள்கையில், இது

தோன்றவில்லையா! அந்தக் கொள்கை எதுவெனில், சுகமாயிருப்பதென்று ஒன்றை யவன் சொல்லித் திரியும் இந்தப் பொய்வேடக் கூத்தே யாகும். தேகமாம் இந்தத் தோற்பைக்குள் புகுந்து நடிக்கும் கேடுகெட்ட கெட்டிக் காரன் ஒவ்வொருவன் தலைக்குள்ளும், தான் சுகமாக இருக்கின்றானென்றோ, அல்லது இனி இருப்பா னென்றோ, அல்லது எந்த விதத்திலாவது மனுஷ தெய்வ விதிகளின்படி இருக்கத்தான் வேண்டுமென்றோ ஒரு சபல எண்ணம் குடிகொண் டிருக்கின்றது. இந்தக் கேடு கெட்ட கெட்டிக்காரனுடைய ஆசை ஒவ்வொன்றையும் எல்லாருமாய்ச் சேர்ந்து அவனுக்கு நிறைவேற்றி வைக்க வேண்டுமாம். அவனது வாழ்நாட்கள்—இந்தக் கேடு கெட்ட கெட்டிக்காரனுடைய வாழ்நாட்கள்—கடவுளர்க் கும் எட்டாத அந்தச் சுகம் என்னும் வெள்ளமாய்ப் பெருகி அல்லலில்லாவகையில் தவழ வேண்டுமாம் "நீ. சுகம்பெறுவாய், இன்பம் பெற்று அவ்வின்பப் பொருள் களோடு அமர்ந்து வாழ்வாய்" என்று மதாசாரியர்கள் நமக்குப் போதித்ததில்லையா! அப்படியிருக்க, நாமேன் இன்பப் பொருள்கள் இருக்குமிடம் இன்னும் கண்டு பிடிக்கவில்லை?" என்று ஜனங்கள் கூக்குரல் இடுகின் றார்கள்.

'எத்தனை பெருந்தன்மை ஒருவனால் பாராட்ட முடியுமோ அத்தனை பெருந்தன்மையையும் பாராட்டி விவகரிப்பதே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்' என்பதல்லவோ மனிதன் தன் கடமையைச் செலுத்துவ தற்கு ஆதாரமான மூலக் கொள்கையாய் இருத்தல் வேண் டும். இதை விட்டுவிட்டு எத்தனை சவுக்கியம் நாம்

அடையலாமோ அத்தனை சவுக்கியம் அடைவதொன்றே வாழ்க்கையின் நோக்கமாக வல்லவோ விவகரித்து வருகின்றோம். ‘ ஆன்மா ’ என்னும் வார்த்தைக்கு ‘ வயிறு ’ என்று ஒரே அர்த்தம் நமது அகராதியில் இப்பொழுது காண்கிறது. நமது சட்ட சபைகளிலும் மற்ற இடங்களிலும் நாம் பேசுவதும் வேண்டுவதும் ஆன்மாவில் இருந்ததல்ல, ஆன்மாவிற்காகவல்ல, வயிற்றிலிருந்தே வயிற்றிற்காகவே. ஆனபடியாற்றான் அவைகளால் நாம் பயனென்றும் காணாதவரா யிருக்கின்றோம். தருமம் வேண்டுமென்று நாம் தெய்வத்தைப் பிரார்த்திப்பதே இல்லை. ஆனால், ‘எங்களுக்கு இது வேண்டும் அது வேண்டும், இந்த வரி வேண்டா, அந்த வசதி வேண்டும், வர்த்தக இலாபம் இப்படியிருக்க வேண்டும், அந்தத் திட்டம் அப்படியிருக்க வேண்டும் ’ என்று சபைகளிலும் சங்கங்களிலும் குவிந்திருந்து வெட்கமென்பது சிறிதுமின்றிக் கூக்குரலிட்டு வருகின்றோம். எங்களுக்கே பிரத்யேகமான இந்த நலம் வேண்டுமென்று சுயநயம் கொண்டாடும்போது நமக்குள் நாணந்தான் தோன்றாதது என்னவோ. சட்டச் சீர் திருத்தங்கள் வேண்டுமென்று தயாளமாய்க் கூச்சலிட்டுப் பலவித கஷ்டங்களுக்கு இக்காலம் ஆளாயிருக்கின்ற ஏழை வயிறு நிறைய ஜனங்கள் வயிற்றிற்கு வழிகாட்ட வாதாடுகின்றோம். சோறில்லாமல் இத்தேசத்துப் பிரஜைகள் எவ்வாறு வாழ்வது கூடும் என்று தலைவர் பலர் பொதுப் பிரசங்கங்களில் கேட்கின்றனர். சோற்றிற்கு வழியைச் சரிவரச் சொல்லாவிட்டால் நாடெல்லாம் பாழாகிப் போகாதோ என்று அவர் மன்றாடுகின்றனர்! மித்திரா, உண்மையே

அது ! நிறைந்த பருப்பும் சோறும் நல்லதே, அவசியமுந் தான். ஆனால், வயிறு நிறப்புவது ஒன்றே நோக்கமா யிருந்தால், அந்தச் சோறுகூடக் கிடைக்குமோ என்பது தான் எனக்குச் சந்தேகம். படுவது கஷ்டமோ, சுகமோ, எப்படி யிருந்தாலும் நீங்கள் மனிதர் தானே! இரைக்கே அலையும் மிருகங்களல்லரே! சுகமே பிர தானம் என்ற உங்கள் கொள்கை மிகுந்த துக்கமே கொண்டு வருகின்றது. ஆதலால், சுகம் சுகம் என்று நாம் பிதற்றி வருவதை நிறுத்தினாலென்ன! அதை முன் னிருந்த நிலையிலேயே அமர்ந்திருக்க விடலாமே.

*பைரன் (Byron) போன்ற அருட்கவிகள் சிலர் முன்வந்து, தம்வரையிற் சுகப்பட்டிருக்கவில்லை என் பதை நிச்சயமாய் உணர்ந்து, அதை வன்மை மிகுந்த வார்த்தைகளால் சொல்லி விடுகின்றனர். இது வெகு இரஸமான செய்தி என்று நினைத்துச் சுகம் ஏன் தமக்கு இல்லாமற் போய்விட்டதென்று மிக்க ஆச்சரியம் அடை கின்றனர். புருஷனும் புலவனுமாய ஒருவன் தெரு விற்கு வந்து இந்தச் செய்தியை விளம்பரம் செய்வதைப் பார்க்க யாருக்கும் சம்மதம் இல்லை. ஆனால், எல்லாவற் றையும் கருதி, விஷயம் போகிற விதத்தையும் பார்த்தால் இதைவிட அசம்மதமானவை எத்தனையோ இருக்கின் றன. பைரனே இந்த விஷயத்தில் வாய்மையே பேசுகின் றான். வெளிக்கு எப்படி நடந்து கொண்டாலும், அந்த ரங்கத்தில் அதை எவ்வளவு பேர் உண்மை யென்று

* பைரனுக்கு நேரான உதாரணமாய் நம் நாட்டில் தாயு மானவர், பட்டினத்தடிகள் போன்றவர்களின் சில பாடல் களை நினைத்துக் கொள்ளலாம்.

உணர்கின்றார்கள் என்பதற்கு இப்புலவர்தம் பாடல்களைக் கொண்டாடும் ஜனங்களின் தொகையே அறிகுறியாகும்.

சுகமோ, தம்பி நீ! முதல் முதல், நீ சுகமாயிருந்தாலென்ன, இல்லாமற் போனாலென்ன! வித்தியாசமொன்றும் அதனால் ஏற்படவில்லையே. இன்று இன்று என்பதெல்லாம் எவ்வளவு விரைவில் நேற்று நேற்று என்றாகி விடுகின்றது. நாளையும் நேற்றாகி விட்டது இல்லையோ! அதன்பின், சுகத்தைப் பற்றிய கேள்வியே இல்லை. வேறு கேள்வி வரும். ஐய, உன்னிடத்திலேயே யாவது உனக்கு உள்ள சிறந்த அபிமானம் தங்கியிருப்பதால், நீ பட்ட பாடெல்லாம், நேற்றுக் கணக்கிலே சேர்ந்துபோன பிறகு அக்கஷ்டங்களும் உனக்குச் சந்தோஷமாகி விடுகின்றன. தவிர, நீ பட்ட துன்பங்கள் எல்லாம் தீமை போல் அக்காலத்தில் தோன்றினாலும் அவைகளால் நீ உண்மையில் அடைந்த நன்மைகளையும், உனது ஆன்மாவைப் பீடிக்கும் பல நோய்களுக்கு அவை மருந்தாய் அமைந்ததையும் நீ அறியாய். காலம் கழியக் கழிய உனது புத்தியும் தெளிவடைந்த பின்னரே நீ இன்னதன் உண்மையை உணரக்கூடும். ஆதலால், நீ சுகமா யிருக்கவில்லை என்பதைச் சொல்லித் திரியாதே. உனது நிலையால் பிறர்க்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. உனக்கும் அது பயனொழியப் பாதகமில்லை. அப்படி உன் சுகத்திற்கு உற்ற கேடும் உனது செய்கையாலேயே நேர்ந்திருக்கு மாதலால் பிறரால் அது தீருமென்பதும் அரிது.

வைத்தியர் ஒருவரும் நாங்கள் சிலருமாக உட்கார்ந்து ஒருநாள் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அவ்வைத்தியரைப் பார்க்க நோயாளி ஒருவன் வந்தான். வந்த நோயாளியைச் சோதித்துப் பார்த்த வைத்தியருக்கு இவனடைந்த நோய்க்குக் காரணம் மிதமின்றி உண்டதே என்று தெரிந்தது. அவர் அவனுக்கு ஏதோ இரண்டொரு வார்த்தைகள் சொல்லி விட்டுப் பின் எங்களோடு பேசுவதில் பொருந்தினர். ஆனால், அந்த அறிவிலாப் பிணியோன் தன் நோயை வைத்தியர் பொறுமையுடன் சரிவரச் சோதிக்கவில்லை என்ற எண்ணமுடையவனாய் அடிக்கடி எங்கள் பேச்சிற்கு நடுவே புகுந்து, "ஆனால் ஐயா, எனக்குப் பசியென்பதே போய் விட்டதே, போய் விட்டதே" எனப் பன்னிப் பன்னி யுரைத்துவர, ஆழ்ந்த விஷயங்களைப் பற்றி எங்களோடு பேசிக் கொண்டிருந்த வைத்தியர், பின்னு மொருதரம் அவன், "பசி யென்பது போய் விட்டதே; என்னால் சாப்பிட முடியவில்லையே" என்று துன்பக் கோலத்தோடு செப்பலும், அவன் பக்கம் திரும்பிப் "பேதாய், அதனால் யாருக்கு என்ன?" வென்று வெறுப்புடன் விளம்பி மீண்டும் எங்களோடு உரை தொடர்ந்தார்.

இன்னொரு கதை தெரியுமா உனக்கு. அண்டை வீட்டில் பேய் புகுந்திருக்கின்றது என்று ஒரு வீட்டார் நடுநடுங்கிப் போய்விட்டனர். ஒவ்வோர் இரவும் குறித்த ஒருநேரத்தில் பக்கத்து வீட்டிலிருந்து ஒருவித பயங்கரமான உருமலும் ஊளையும் கத்தலும் கேட்கும். அந்தச் சந்தடிக் கிடையே, "ஐயோ, முன் முன் முன்னே

சுகம் சுகம் சுகமா யிருந்தேனே, இப்பொ கட் கட் கட்டப்பட்டேனே" கட கட க்ளக் க்ளக் கடக்ளக் வுற் வுற்வுற் வுஸ்ஸ்ஸ்! என்னும் பேய் முறைப்பாட்டையும் கேட்கலாம். "பொறு பொறு பேயே பொறு!" அல்லது அந்த வைத்திய அறிஞர் சொன்னபடி, "பேதாய், அதனால் யாருக்கு என்ன!" ஆனால், பேயோ பொறுமையாய் அமரவில்லை. அண்டை அயல் வீட்டார்களும், நடுங்கியும் பயந்தும், கடைசியில் இதைக் கேட்டுச் சலிப்படைந்தும் போய், நமக்கென்ன என்றிராமல், பிசாசு குடிப்புகுந்த வீட்டைச் சோதித்துப் பார்ப்பதே சரியெனத் தேர்ந்து, பலர்கூடி ஓர் இரவு மெள்ளமெள்ள அங்குச் சென்றார்கள். அவ்வாறு சென்றவர்கள் கண்டதென்ன! துன்பமுடைய பேயொன்று பைரனின் வேடம்தரித்து அங்கு அழுதிருந்ததோ எனின், அன்று. துருவேறிய ஒரு கிணற்று ராட்டினமே நீரிழுக்கும்போது அவ்வாறு உருமி ஊளையிடுவதெனத் தெளிந்தனர். இராட்டினம் இங்குத் தன் குரலுக்குத் தக்கபடி, பைரன் முதலியோர் பாடிய வாழ்க்கையின் துக்க தத்துவத்தைத் தானும் பாடிக்கொண்டு வந்தது.

பார்க்குமிடத்து எனக்குச் சுகம் வேண்டுமென்று அலேந்தலேந்து விவகரிப்பவனெவனும்—அந்த விவகாரம் தேர்தல்களில் ஓட்டெடுக்கும் பெட்டியோ, புலமையால் பாடும் பாடல்களோ, வேறெந்த வகையிலேனும் முயன்று திரிபவனானாலும் சரி—நமக்கெவ்வித நன்மையும் புரியத் தகுந்தவன் அல்லன். அயோக்கியர்களேயும் அற்பர்களேயும் உலகத்தினின்று விலக்குபவன் அவனல்லன். தன்னாலும் தன் வால்பற்றித் தொடர்வோராலும் அத்தகைய

கயவர்களின் தொகையை அதிகப் படுத்துகின்றவனே ஆவான். ஆனால் ஒன்று கவனியுங்கள். கஷ்டங்களைப் போக்கிச் சுகம் அடைவது எனும் இந்த அல்லலுறு முயற்சியெல்லாம் இக்கால நூதனங்கள். வீரம் மிகுந்த பண்டைக்காலத்தில் இல்லை. கடையாய இக்காலத்திற்கே உரியன. இந்தச் சுகம்பெறவதொன்றே நம்வாழ்க்கையின் முடிவாய பயன் கருதும் இலக்கு! சீ! சீ! ஆராய்ந்து பார்த்தால் இவ்வவலக் கொள்கை இரண்டு நூற்றாண்டு களுக்கு முன் இருந்த தில்லை.

அஞ்சாத தன்மை வாய்ந்த மனிதன் முற்காலத்தில் முயன்று தேடியது, தனது கருமத்தைச் செய்து முடிப் பதற்கு வேண்டிய அளவு சுகமே. "என்னால் சாப்பிட முடியவில்லையே" என்பதல்ல அவனுற்ற வியாகூலம். "நான் செயலற்று இருக்கின்றேனே", என்று ஏங்கு வான். பார்க்கப்போனால் அறிவென்பது படைத்த மனிதன் எவனுக்கும் இருக்கக்கூடிய மனக்குறை, தனக் குரிய வேலையைச் செய்வதற்கில்லையே, பிறவிப் பயனைப் பூர்த்திசெய்ய இயலவில்லையே, என்பது ஒன்றேயாகும். மாந்தர்காள், பகலெல்லாம் பறந்தோடிப் போகின்றது, நம் வாழ்நாளும் வழிந்தோடி விடுகின்றது. இருள் வந்த பின் எவனுக்கும் வேலை செய்ய முடியாது. *இரவுதான் வந்தபின் நமது சுகம் துக்கம் எல்லாம் அழிந்துவிட் டது, அடியோடு போய்விட்டது. அளவு கடந்து உண் டாலும் சமித்துக் களிக்கும் ஒரு பெருவயிறு காலிபோ லும். மண்ணுண்டு மகிழும் புழுவைப்போல், சுகமா

---

* இரவு, இருள் என்னும் இப்பதங்களைக் கார்லைல் மர ணம் எனும் பொருளில் உபயோகப் படுத்துகின்றார்.

யிருந்தாலென்ன ; அல்லது குரங்கு செத்த ஆண்டிபோலும், மனங்கூசிப் பரிதபிக்கும் பைரன் அனைய இன்னிசைப்புலவர் போலும், மற்றுத் துருப்படிந்து உருண்டு அழுத அந்தக் கிணற்று அபஸ்வர இராட்டினம்போலும் துக்கமா யிருந்தாலென்ன ! இதனால் யாருக்கு என்ன ! நாம் கொண்டாடும் சுகம் துக்கம் இரண்டும் முடிந்துவிடும் விஷயங்கள்! ஆனால் நமது வேலையோ! ஐயன்மீர், அது அழிந்து விடுவதில்லை, கண்டீர். மறைவதும் இல்லை. நமது கருமம், செய்து முடிந்தனவும் செய்ய இருப்பனவும், எஞ்சி எந்நாளும் நிற்கும். முடிவு இலாக் காலமெலாம் அதுவே நிற்கும்! இனி வரும் நாளெல்லாம் இதுவொன்றே நம் கருத்து! சண்டைச்சச்சரவால் ஆட்டிவைத்த இச்சிறு பகல், அதற்குரிய பொய்க்கூத்தும் மாயத்தோற்றமும், காக்கைப் பொன் கிரீடமும் எல்லாம் தொலைந்தது. விண்மீன் இழைத்த நன்முடி தரித்து, அதற்குரிய அமைதியோடும் சாச்வத வாய்மையோடும் இரவு வந்துவிட்டது! ஐய, நீ என்ன செய்திருக்கின்றாய் ? எப்படிச் செய்திருக்கின்றாய் ? சுகம் துக்கம் என்பதெல்லாம் நீ செய்த வேலைக்குக் கிடைத்த கூலியே. இந்த இரவெனும் இடம் தேடி நீ வழி நடக்கும்போது கூலியாய்ப் பெற்றதைச் செலவும் செய்துவிட்டாய். அதனில் ஒரு காசுகூட உன் கையில் இல்லை. தின்றுவிட்டாய். இப்பொழுது உன்வேலை, நீ செய்து வைத்த வேலை எங்கே? எங்கே! காட்டிவிடு. உன் வேலையைப் பார்ப்போம் காட்டிவிடு?

வயிற்றில் யானைத்தீ பற்றி எரியத் தலையிலும் களிமண் பிடித்த கயவர்தாம், தின்னும் சோற்றிற்குச் சுவை

பார்த்துக் குறை கூறிய வண்ணமா யிருப்பார்கள். மற்ற வர்கள் உணவுதேடி உண்டபின் இவ்வாழ்க்கையில் சாதிப்பது என்ன வெனச் சிந்திப்பர்.

# A STORY FROM TOLSTOY

# முன்னுரை

'மண்ணே நீயே சரதம்' என்று மண் நச்சி மாந்தர் விவகரிக்கும் இந்தக் காலத்தின் கொடுமையெல்லாம் காணுமாறு டால்ஸ்டாய் என்னும் பேரறிஞர், ருஷியா நாட்டில் பிறந்து வளர்ந்து வாழ்க்கை நடத்தியவர். பெற்ற கல்வியால் விரிந்துயர்ந்த அவர் மனம், செல்வாக்கு வன்மை பெற்றார் கொடுமையும் எளியவர் வறுமையும் கண்டு ஆற்றாது, உலகெலாம் உய்யவழி யாதெனச் சிந்திக்கத் தொடங்கினர். இவ்வழிபற்றிய மனம் மண்ணையும் அது தரும் சுகத்தையும் நாடுமோ? மண் வாழ்க்கை துறந்து, ஏழைக்கேழையாய் வாழ்க்கையில் புகுந்து, பிறரும் தானும் உய்யத் தன் வாழ்க்கையாலும் நூல்கள் வரைந்தும் முயன்று வந்தார். அவர் எழுதிய நாடகத்திலும் சிறு கதைகளிலும் அவர்கண்ட வாய்மையைத் தமது வாழ்க்கையேபோன்ற எளிய நடையில் எல்லோரும் எளிதில் அறியுமாறு எழுதியுள்ளார். இப்பொழுது நாம் மொழிபெயர்த்துத் தந்துள கதையில் தண்டனையினுல் குற்றத்தை நிறுத்தமுடியாது என்பதை வெகு அழகாக நிருபணம் செய்துள்ளார். அறிந்தவர் அனைவரும் சிறையினுல் குற்றத்தையும், சட்டதிட்டங்களாலும், அரசியல் முறைத் திருத்தத்தாலும் வாழ்க்கையையும், குறைக்கவும், உயர்த்தவும் முடியாது என்பதையே விளக்கி வைக்கின்றனர். டால்ஸ்டாயும், கார்லைல் எமர்ஸன் ரஸ்கின் இவர்களைப்போல் வாழ்க்கையின் வாய்மையை, வழி வேருயினும், ஈதெனக் கண்டவர்; ஆனபடியினுல்தான் இக்கதையையும் மொழிப்பெயர்த்துத் தந்துளோம்.

---

டால்ஸ்டாய் எழுதிய

# குற்றமும் தண்டனையும்

மொனக்கோ என்னும் சிறிய நாடு ஒன்று பிரான்ஸ் இத்தாலியா நாடுகளின் எல்லைப் புறத்தில், மத்திய தரைக் கடலுக் கருகாமையில் இருந்தது. இது மிகமிகச் சிறிய நாடு. இந்நாடுறையும் மாக்களின் தொகை ஏழாயிரமே யாகும். என்றாலும் இதற்கு அரசன் ஒருவன் இருந்து வந்தான். நாட்டின் சுற்றளவும் ஜனத் தொகையும் சிறியதேயாயினும், பாராளும் பூவேந்தர்க்குரிய கோலும் கொடியும் நெடுமாடக் கோயிலும் தானையும், தானைத்தலைவனும் மந்திரியும் பிரதானியும் ஆய வைபவங்களில் இச்சிறு நாடு காக்கும் சிற்றரசன் குறைந்தவன் அல்லன். மதம் காக்கும் பாதிரிமார்களும் அங்கு இருந்தனர்.

இந்நாட்டின் காப்பாய் அமைந்த சேனையோ பெரிய சேனை யன்று. அறுபது வீரர்களையே கொண்டது அது. ஆயினும் அது சேனையேதான் அல்லவா? மற்றப் பெரிய நாடுகளைப் போலவே, பிரஜைகள் வரிகளும் செலுத்த வேண்டும்.

சில ஆண்டுகளுக்குமுன் இச்சிறு நாட்டில் கொலை யொன்று நடந்தது. இதுவே இந்நாட்டிற்கு முதற்கொலை. ஜனங்கள்இயற்கையிலே அமைதியுடையவர்கள் ஆதலால்

அங்கு அந்நாள்வரைக் கொலையொன்றும் நடந்ததேயில்லை. காவலர் கொலையாளியைக் கைதுசெய்து நீதிபதியின்முன் விசாரணைக்குக் கொண்டுவந்தனர். நியாயாதிபதியும், ஜூரிகளும் வக்கீல்மார்களும் சாக்ஷிகளும் ஒருமுகமாய்க் குற்றவாளியின் தலையை வாங்கிவிடுதலே நியாயம் என்று தீர்மானித்து, முடிவை மன்னனுக்கு அறிவித்தனர். அவனும் 'ஓம்' என்றுகூறித் தீர்ப்பை உறுதிசெய்தான்.

ஆனால் தீர்ப்பை நிறைவேற்றிவைக்கும் விடயத்தில் சங்கடம் ஏற்பட்டது. தூக்கிலிடவோ தலையை வாங்கவோ தேவையான இயந்தரச் சாதனங்களை அந்நாடு பெற்றதில்லை. கூலிக்குக் கொலைசெய்யும் கொலையாளிகளும் அங்கு இல்லை. இந்நிலையில் என்செய்வது? செய்வினை நோக் கூடினர் மந்திரக்கிழவர். கூடியவர், அருகிலுள்ள பிரஞ்சு அரசாங்கத்தாருக்கு எழுதித் தூக்குமரத்தையும் கொலையாளிகளையும் வரவழைத்துவிடுவதென முடிவுசெய்தனர்.

உடனே கொலைசெய்யும் இயந்திரமும், அதற்குரிய ஆள்களும் அனுப்பமுடியுமா வென்றும், முடியுமெனின் அதற்கான செலவை அறிவிக்குமாறும் கேட்டனர். பிரஞ்சு அரசாங்கத்தாரிடமிருந்து இயந்திரமும் ஆளும் அனுப்பிவைக்கமுடியுமென்றும் அதற்குப் பதினாறாயிரம் பொன் செலவாகுமென்றும் பதில்கிடைத்தது.

அரசனுக்கு இச்செய்தியை மந்திரிகள் அறிவிக்க அவன் சிந்திக்கலாயினன். 'பதினாறாயிரம் பொன்னா! இந்தப் பயலுக்கா? இவன் புல்லிய தலையை வாங்குவ

தற்கு இத்தனை செலவா! பதினாறாயிரம் பொன் என்றால்........சமஸ்தானக் குடிக்களில் ஆளுக்கு இரண்டு பொன் வீதம் ஆகிறது. சீ, இது சரியல்ல. குடிகளும் இச்செலவை ஏற்க விரும்ப மாட்டார்கள். கேட்டால் கலகம் விளைத்தாலும் விளைப்பர். வேண்டா. ஆனால் குறைந்த செலவில் வேறுவழியில் இக்காரியம் முடியுமானால் நலமாயிருக்கும். யோசித்துப் பாருங்கள்.' என்று கூறினான் அரசன்.

இதுகேட்ட மந்திரிமார்கள் மீண்டும் கூடினர். இத்தாலிதேசத்தின் ஞாபகம் வந்தது. 'பிரான்சோ குடியரசு நாடு. எனவே அந்நாட்டார் முடிசூடிய மன்னரை மதியார். இத்தாலி அரசனைக் கொண்டு காரியத்தை முடித்துவிடலாம். அரசனுக்கு அரசன் இச்சிறு உதவி செய்ய மறுக்கமாட்டான். குறைந்த செலவில் காரியம் முடிந்துவிடும்' என்று கருதினர். அவ்வாறே இத்தாலி நாட்டு அரசாங்கத்திற்கு மன்னன் கடிதம் விடுத்தான்.

தலைவாங்கும் இயந்திரமும் ஆளும் தர முடியுமென்றும், அதற்குப் பன்னீராயிரம் பொன் செலவாகுமென்றும், இத்தாலியிலிருந்து பதில் வந்தது. இது சிறிது சகாயந்தான். எனினும் மொனக்கோ நாட்டிற்கு இது பெருந்தொகையே. இத்தனை பொன்னை இச் சிறு பயல் தலைவாங்கவா செலவிடுவது என்று மீண்டும் கருதினர். போர் வீரர்களில் ஒருவனைக்கொண்டு இக்காரியத்தைச் செய்துவிட்டால் என்ன. சுலபமாய்ப் பணச் செலவுமில்லாது முடிந்து விடுமே என்று தோன்றிற்று. தானைத் தலைவனை அழைத்துக் கேட்டனர். அவனும் தனது

வீரர்களுடன் கலந்து பேசினான். 'போரில் பொருதற்குக் கற்றோமேயொழியக் கொலைத்தொழில்புரியக்கற்றதில்லை.' என்று ஒரு முகமாய் அவர்கள் கூறி முன்வர மறுத்து விட்டனர்.

அரசாங்க அதிகாரிகளுக்குச் செய்வது விளங்காது போயிற்று. மந்திரிகளும் மற்றவர்களும் ஒன்றுசேர்ந்து இது விஷயமாய் முடிவொன்று செய்ய ஒரு 'கமிட்டியை' (Committee) நியமித்தனர். இந்தக் கமிட்டியிற்குள் உட்கமிட்டியும் (Sub Committee) ஏற்பட்டது. பலநாள் ஆலோசனை செய்து ஆலோசனைக் கமிட்டியார் மரணதண்டனையை ஆயுள்பரியந்தமான காவல் தண்டனையாய் மாற்றிவிட்டால் கவலையும் பணச்செலவும் இல்லாது போய்விடும் என்று யோசனை கூறினர். மன்னனும் மகிழ்வுடன் ஏற்றான்.

ஆனால் என். மற்றொரு இடையூறு இதனுள் புகுந்தது. ஆயுள்பரியந்தம் ஒருவனை அடைத்து வைப்பதற்கேற்ற காவற் கூடத்திற்கு என்செய்வது. அந்நாட்டில் ஒருநாள் அல்லது ஒரு வாரத்திற்கு மேற்படாத காலம் வரைச் சிறைவைக்க ஏற்றவிடந்தான் உண்டு. என்செய்வது? வெகு பிரயாசைப்பட்டு ஒருவிடம் தேடிப் பிடித்தனர். அதில் குற்றவாளியை அடைத்து அவன் வெளியேறிப் போய்விடாது பார்த்துக்கொள்ள ஒரு காவற்காரனையும் நியமித்தனர். அரண்மனை தர்மசாலையிலிருந்து உணவு வாங்கிவந்து கொடுத்தும், அவன் ஓடிவிடாது பார்த்தும் வந்தான் காவற்காரன்.

மாதங்கள் சில சென்றன. வருடம் ஒன்றும் கழிந்தது. அரசன் ஒருநாள் அரசாங்க நிர்வாக வரவுசெலவுக் கணக்கைப் பார்வையிட நேர்ந்தது. கணக்கில் புதிய செலவு இது இருக்கக்கண்டான். சிறைவைத்திருப்பவனது காவல், சாப்பாட்டிற்கென ஏற்பட்ட செலவு இவ்வளவெனக் கண்ட அரசன் சிந்தித்தான். அந்தப் பயலுக்காகக் காவற்காரன் வேண்டியிருக்கிறது. தண்டச்சோறு போடவேண்டி யிருக்கிறது. இதற்கென வருடத்திற்கு அறுநூறு பொன்னுக்கு மேலாகிறது. அவனே கிழவனல்லன். பால்யனுயிருக்கின்றான். உடல் உரத்தை நோக்குங்கால் இன்னும் ஐம்பது ஆண்டுகள் நிச்சயமாய் உயிரோடிருப்பான். கணக்குப் பார்த்தால் செலவு ஓடிவிடும். என மதித்த மன்னவன் தன்னவை அமைச்சரை அழைத்துவரப் பணித்தான்.

அரசன் ஆணையேற்று வந்தவர்களைப் பார்த்து, 'ஐயன்மீர், இந்தக் கைதி அரசாங்க வருமானத்தை விழுங்கி விடுவான் போலிருக்கிறது. இச்சுமையை நாடு தாங்காது. இவன் பொருட்டு ஆகும் செலவைக் குறைக்க ஏற்பாடு செய்தே தீரவேண்டும்!' என்று மன்னன் கூறலும் அவர்கள் தனியிடம் சென்று சிந்தித்தனர்.

'காவற்காரனை நீக்கி விட்டாலென்? செலவுகுறையும்' என்றான் ஒருவன். 'கைதி ஓடிவிடுவானே' என்றான் மற்றொருவன். இம்மொழி கேட்ட முதன் மந்திரி 'ஓடிப்போனால் போகட்டுமே. நமது நாட்டைப் பிடித்த சனியன் தொலைந்தது, தொலையட்டும்' என்று கூற

எல்லோரும், 'அதுவே சரி' என்றனர். இதை அரச னுக் கறிவிக்க அவனும் அப்படியே ஆகட்டும் என்ருன்.

காவற்காரனை நீக்கினர். கைதி வெளியேறவில்லை. சாப் பாட்டு வேளைக்கு உணவு வராமையால் வெளிவந்தான். வந்தவன் காவற்காரனைக் காணவில்லை. தானே தர்மசாலை சென்று உணவைவாங்கித் தின்றுவிட்டுத் தனது அறைக் குள்வந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்துக்கொண் டான். மறுநாளும் அவ்வாறே செய்தான். இவ்வாறு பல நாள் கழிந்தது. வாரங்களும் சென்றன. ஓடுபவனுய்த் தெரியவில்லை.

மந்திரிமார்கள் நினைத்தவாறு குற்றவாளி ஓடிவிடாது கிடக்கவே திரும்பவும் எல்லோரும் ஒன்றுகூடினர். கூடி யவர், அவன் ஓடிப்போக மாட்டான்போல் தோன்று கிறது. அவனிடம் நாம்போய் இனி அவன் இங்கு இருக்கவேண்டியதில்லை, என்று கூறி விடுவதெனத் துணிந்தனர். உடனே நீதிபதி அவனை வரவழைத்து, "நீ ஏன் ஓடிவிடாதிருக்கிருய். உனக்குத் தடையாய் காவற்காரனும் இல்லையே! நீ எங்கே வேண்டுமானுலும் போகலாம். அரசன் ஒன்றும் செய்யமாட்டான்' என்று கூறினர்.

குற்றவாளி, நீதிபதியை நோக்கிச் சொல்வான்: "ஐய, நான் ஓடிப்போனுல் அரசன் எதுவும் செய்யமாட் டான் என்பதை அறிவேன். ஆனுல் எனக்குப் போகத் தான் இடமில்லை. நான் ஓடி என்ன செய்கிறது. நீங்கள் எனக்குத் தண்டனைவிதித்து என்னைக் கெடுத்து

விட்டீர்கள். தண்டனை அடைந்தவன் என்று எல்லோரும் என்னை ஒதுக்குவர். ஜனங்கள் என்னை மதிக்கமாட்டார்கள். வேலை செய்து பிழைக்கலாமோ என்றால் அதுவும் இனி முடியாது. சிறையிலிருந்ததால் வேலைசெய்யும் பழக்கத்தையும் இழந்துவிட்டேன். நீங்கள் என்பால் வழங்கியது நீதியல்ல. அநீதியே. ஆதியில் நீங்கள் எனக்கு விதித்தது மரணதண்டனை. அதை நீங்கள் நிறைவேற்றி யிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாதது அநீதி அல்லவா. அதற்காக நான் குறைகூற முன்வரவில்லை. பின்னர் ஆயுள் தண்டனை விதித்து எனக்குச் சாப்பாடு முதலான வசதிசெய்து கொடுக்க ஒரு ஆளை நியமித்தீர்கள். அவனையும் பிறகு நீக்கிவிட்டீர்கள். நானேபோய் சாப்பாடு தேடிக்கொள்ள வேண்டியதாயிற்று. அதற்காகவும் உங்கள்மீது குறைகூறவில்லை. ஆனால் இதுபோது வெளியேறிவிடு என்று சொல்லுகிறீர்களே. இது நீதியாமோ. இதை நான் ஏற்கமுடியாது. நீங்கள் செய்வதைச் செய்யுங்கள், நான் இவ்விடம்விட்டு எங்கும் கண்டிப்பாய்ப் போகமாட்டேன்.''

இவ்வார்த்தையைக்கேட்டு வியப்படைந்த நீதிபதியும், மற்ற மந்திரிகளும் இனிச் செய்வது யாதெனத் தெரியாது விழித்தனர். மீண்டும்கூடியோசித்தார்கள். கைதியோ வெளியேறமாட்டேன் என்று கூறுகிறான். அவனை எப்படியாவது வெளியேற்றிவிட வேண்டும். கடைசியாகப் 'பென்ஷன்' கொடுத்து அவனை இந்நாட்டினின்று அனுப்பிவிடுவதெனத் தீர்மானித்தனர். அரசனுக்கு விஷயத்தைக் கூறக் கடைசியில் குற்றவாளிக்கு வருஷம் ஒன்றுக்கு

அறுநூறு பொன் பென்ஷனுகக் கொடுத்துவிடுவதென்று முடிவு செய்யப்பட்டது. இம்முடிவை குற்றவாளிக்கு அறிவித்தார்கள்.

இதைக் கேட்டகுற்றவாளி, 'ஐயா, நல்லது. நீங்கள் சரிவர இத்தொகையைக் கொடுத்துவருவீராஞல் எனக்கு வெளியே செல்ல ஆக்ஷேபணை எதுவும் இல்லை. தவறினால் வந்து விடுவேன். அந்த நிபந்தனையின் பேரில் நான் போகச் சம்மதம்,' என்று மொழிந்தான்.

மொனக்கோ நாட்டார் மூன்றிலொரு பங்கு பென்ஷன் தொகையை முன் பணமாகக் கொடுத்துவிட்டனர். அவனும் அதையேற்று நாட்டைவிட்டுப் புறப்பட்டு, அந் நாட்டுக் கருகிலுள்ள எல்லைப் புறப் பிரதேசத்தில் குடியேறினன். பெற்ற பென்ஷனைக் கொண்டு சில ஏக்கர் நிலம் வாங்கித் தோட்டம் போட்டுக் காய்கறிகளைச் சந்தையில் கொண்டுபோய்விற்பதும், மற்றநாள்களில் தோட்டத்தில் வேலை செய்வதுமாய் வாழ்க்கையை நடத்தினன். மாதந்தோறும் மொனக்கோ நாடு பென்ஷன் தொகையைப் பெற்று வருவான். அவனது வாழ்க்கை சுகமும், அமைதியும் தூய்மையும் நிறைந்ததாய் அமைந்தது.

வேறு நாடாய் இருந்தால் என்னவாயிருக்கும்? அவனைத் தூக்கிலிட்டிருப்பர். அல்லது குடிகளின் பணம் வீணுவதைக் கவனியாது ஆயுள் பரியந்தம் சிறையிலிட்டிருப்பர். அத்தகைய நாட்டிலே அவன் பிறந்து வளர்ந்து இக்கொலைக் குற்றம் செய்யா

மற் போனது அவனது நல்ல காலமென்றே சொல்ல வேண்டும்.

---

குறிப்பு:—இக்கதைத் தொடர்ச்சிக்கும், அறிஞர் டால்ஸ்டாய் கருத்து விளங்கவும் தேவையில்லாச் சில பாகத்தை விடுத்துள்ளோம்.